விலை: 60.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12+12

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 147 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 01 ஞாயிற்றுக்கிழமை (15.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






## புதிய அமைச்சர்கள் நால்வர் பதவியேற்பு



காஞ்சன விஜேசேகர – மின்சக்தி - எரிசக்தி
ஜி.எல்.பீரிஸ் – வெளிவிவகாரம்
தினேஸ் குணவர்த்தன – பொதுநிர்வாகம்
பிரசன்ன ரணதுங்க – நகர அபிவிருத்தி - வீடமைப்பு

(கொழும்பு)

புதிய அமைச்சர்கள் நால்வர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

அந்தவகையில் தினேஸ் குணவர்த்தன பொது நிர்வாக அமைச்சராக 11

நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு

## முள்ளிவாய்க்கால் நோக்கி நடைபவனி

இன்று ஆரம்பம்

10ஆம் பக்கம் பார்க்க

## அமரகீர்த்தி அத்துகோரள அடித்தே கொல்லப்பட்டார்

உறுதிப்படுத்திய மருத்துவ அறிக்கைகள்

(கொழும்பு)

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள அடித்தே கொல்லப்பட்டுள்ளார் என மருத்தவ அறிக்கைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

அண்மையில் காலிமுகத் திடலில் அரச ஆதரவாளர்களினால் தோற்றுவிக்கப்பட்ட வன்முறை 11

ஊரடங்குச் சட்டம்

## 5 மணிக்கு தளர்ந்து 6 மணிக்கு அமுல்

(கொழும்பு)

நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவு இன்று காலை 5.00 மணிக்கு தளர்த்தப்பட்டு மீண்டும் மாலை 6.00 மணிக்கு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு இதனைத் 11

# முள்ளிவாய்க்காலில் படையினர் குவிப்பு!

## நினைவேந்தலை தடுக்க சதி

*(முல்லைத்தீவு)*

தமிழினப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகள் எதிர்வரும் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நடைபெறவுள்ள நிலையில் அப்பகுதியைச் சூழவுள்ள பிரதேசங்களில் இராணுவ காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸ், இராணுவம் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

*(11ஆம் பக்கம் பார்க்க)*



‘கோட்டா கோ ஹம’

## போராட்டக் களத்தை பராமரிக்க குழு

ரணில் அதிரடி

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக காலிமுகத்திடல் மற்றும் ஜனாதிபதி செயலகம் முன்னால் நடைபெற்றுவரும் தன்னெழுச்சி ஆர்ப்பாட்டம் ஒரு மாதத்தை கடந்த நிலை 11

## பிரதமர் ரணில் தலைமையிலான அரசுக்கு நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ஆதரவு



(யாழ்ப்பாணம்)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவளிக்க தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தீர்மானித்துள்ளார்.

எமது கட்சியில் நான் மாத்திரமே பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றேன்.

இந் நிலையில், நாட்டினதும் மக்களின 11

## ரணிலின் யோசனைக்கு சுமந்திரன் இணக்கம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசி உரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது, தமது அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பீர்களா? எனவும் சுமந்திரனிடம் பிரதமர் வினவியுள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை தீர்க்கும் 11

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக மேலதிக பொலிஸாரை நியமிக்குமாறு பாதுகாப்பு பிரிவின் பணிப்பாளரிடம் பொலிஸ் தலைமையகம் பணிப்புரை விடுத்துள்ளது.

அதன்படி, ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மேலதிகமாக 4 அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் அதிகபட்சமாக 6 பொலிஸ் அதி 11

## மாமரத்தால் விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மாமரத்தில் ஏறி கொப்பு வெட்டியவர் 11

## அரச ஆதரவு எம்.பிக்கள் நால்வர் திடீர் பல்டி

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு ஆதரவளித்த நான்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற சந்திப்பின் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்முறைச் சம்பம் தொடர்பில் இதுவரையில் 90 பேர் கைது

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை 90 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் வரை 75 பேர் கைது செய்யப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சந்தேக நபர்கள் நாட்டின் பல பாகங்களில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 15 பேர் நீர்கொழும்பிலும் 17 பேர் பொலன்னறுவையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இதே சம்பவம் தொடர்பில் கம்பஹாவைச் சேர்ந்த 09 சந்தேக நபர்களும் அனுராதபுரத்தைச் சேர்ந்த 04 சந்தேக நபர்களும் நேற்று கைது செய்யப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சமூக வலைத்தளங்கள் ஊடாக வன்முறைகளை தூண்டிய குற்றச்சாட்டில் 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# குளவி கொட்டியதில் இருவர் வைத்தியசாலையில்

(சாவகச்சேரி)

கொடிகாமம் மந்துவில் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கருங்குளவி கொட்டிய நிலையில் இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மந்துவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 72 வயதான ஞானசேகரம் மற்றும் 31 வயதான நிசாந்தன் ஆகியோரே இவ்வாறு குளவிக் கொட்டிற்கு இலக்காகியுள்ளனர்.

தற்போது காற்றுடன் கூடிய காலநிலை ஆரம்பித்திருப்பதால் பனை மற்றும் தென்னோலைகளில் கூடு கட்டியிருக்கும் கருங்குளவிகள் கலைந்து ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-30)


## சொர்க்கம் திருமண சேவை

- கனடாவில் வசிக்கும் 30 வயது மணமகளுக்கு இலங்கையில் படித்த அழகான மணமகன் தேவை.
- லண்டன் இல் வசிக்கும் 33 வயது கிறிஸ்தவ மணமகனுக்கு இலங்கையில் மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
- யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சொந்த கடை வைத்திருக்கும் 30 வயது மணமகனுக்கு மணமகளை எதிர்பார்க்கின்றோம். சீதனம் எதிர்பார்க்கவில்லை.

(11373)

0014166661855
077 650 5097

## பெண் பயிற்றுவிப்பாளர் தேவை



யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் உடற்பயிற்சி நிலையத்திற்கு பெண் பயிற்றுவிப்பாளர் தேவை.

விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி தொடர்பாக அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-4324)

070 223 3344


# பிரதி சபாநாயகர் பதவிக்கு சஜித் தரப்பால் ரோஹிணி கவிரத்ன

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் பதவிக்கு மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்னவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். (4)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 09 பரப்புக்காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு)

- A9 வீதியில் இருந்து 150m தூரம்
- லேடன் கொம்பனி பின்புறம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரம்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- நல்ல சூழல்
- 20 அடிப் பாதையுடன்

முன்பகுதியாக உள்ள காணி
1 பரப்பு - 7 இலட்சம்

பின்பகுதியாக உள்ள காணி
1 பரப்பு - 5 இலட்சம்

(11354)

074 043 6673

இன்று (15.05.2022) சுபநேரத்தில்

## சதீஷ் அரைக்கும் ஆலை



திறந்து வைக்கும் சிறப்பு நிகழ்வு இடம்பெறும்.

இளம் தொழில் முயற்சியாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் மறைந்த நவாலியூர் சதீஷ் (SDO) ஞாபகார்த்தமாக அரைக்கும் ஆலை திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனை அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நவாலி (11370) உரிமையாளர் ரமேஷ் அஸ்வினி

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் நிறுவனத்தில் பணி புரிவதற்கு பெண் ஊழியர் தேவை. (11374)

077 964 5877

# காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 78 பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கிழக்கு எல்லைகள்.
- சமுர்த்தி வங்கி வடக்கு எல்லைகள்.
- கைதடி சந்தி 200 மீற்றர் தூரம்.
- வட மாகாண சபை 250 மீற்றர் தூரம்.
- மூன்று வழிப்பாதையுடன்

01. A9 வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)
02. கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடிப் பாதையுடன்)
03. சமுர்த்தி வங்கி அருகாமை வீதி 100 மீற்றர் தூரம். (16 அடிப் பாதையுடன்)

- சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்.
- செம்மண் காணி.




(11354)

தொடர்பு

077 623 4204, 077 288 0152, 076 658 3621


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவேந்தலை தடுக்கவும் கூடாது விசாரணைக்கு அழைக்கவும் கூடாது

## அருட்தந்தை சக்திவேல் வலியுறுத்து



(நெளுக்குளம்)

**முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை தடுப்பதற்கோ அல்லது அதனை தொடர்ந்து விசாரணைகளை நடத்துவதற்கோ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடமளிக்கக்கூடாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.**

அவரால் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதா வது,

முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்ப் போடு முள்ளிவாய்க்கால் வாரம் ஆரம்பமாகியுள்ளது. எதிர் வரும் 18 ஆம் திகதி முள்ளி வாய்க்காலிலும் தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு மிகவும் உணர்வு பூர்வமாக ஈக சுடரேற்றும் நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டைத் தொடர்ந்து மைத்திரி மற்றும் தற்போதைய பிரதமர் ரணில் தலைமையிலான நல்லாட்சிக் காலத்தில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலு க்கு பாரிய தடைகள் இருக்க வில்லை.

ஆனால் 2019 ஆம் ஆண்டிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் இராணுவம் மற்றும் புலனாய்வுப் பிரிவினரால் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே முள்ளி வாய்க்கால் நினை வேந்தல் நடந்தது.

இதனை ஒழுங்கு செய்தவர்கள், பங்கேற்றவர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதோடு காரணமின்றி விசாரணைக்கும் அழைக்கப்பட்டனர்.

இது போரில் கொத்துக் கொத்தாக கொல்லப் பட்டவர்களை கூட்டாக நினைவு கூறுவதையும் வலி சுமக்கும் மக்கள் ஆறுதல் அடைவதையும் தடுக்கும் அநாகரிக செயலாயும் அமைந்தது.

இது இனியும் நடக்கக் கூடாது என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைக்கு வித்திட்டு ஆதரவளித்தவரும் தற்போதைய பிரதமரே. இவர் பிரதமராக தலைமையேற்று இருக்கும் இக் கால கட்டத்தில் ஆர்ப்பாட்டமோ, ஊர்வலமோ, கோசங்களோ இன்றி அமைதியான முறையில் உயிர்த்தியாகமானவர்களை நினைந்து அவர்களுக்கு ஈகச் சுடரேற்றுவதற்கு தடைகளை ஏற்படுத்துவது ஏற்படுத்துவதற்கும் இடமளிப்பது எந்த வகையிலும் நியாயமில்லை.

ராஜதந்திர ரீதியில் தமிழ் மக்களை அணுகவும் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தெற்கின் மக்களுக்கு இருக்கும் சுதந்திரம் வடக்கின் மக்களுக்கு கிடைக்க வழி ஏற்படுத்த வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்கள் தம்முடைய துயர் போக்கவும் வலிகளை ஆற்றிக் கொள்வதற்கும் துணை நிற்க வேண்டும் என தெரிவித்தார். (4-6-299)

# கோட்டா கோ கமவில் விளையாட்டுத் திடல் திறப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் காலிமுகத் திடல் மற்றும் ஜனாதிபதி செயலக முன்றலில் இடம்பெற்று வரும் அரசாங்கத்திற்கு எதிரான தன்னெழுச்சி ஆர்ப்பாட்டம் இன்று 39 ஆவது நாளை எட்டியுள்ளது.

இதேவேளை காலிமுகத் திடல் ஆர்ப்பாட்டக்களம் கோட்டா கோ கம என ஆர்ப்பாட்டக்காரர்களால் பெயரிடப்பட்டுள்ளதுடன் அங்கே நூலகம், மருத்துவமனை, சர்வதேச ஊடக நிலையம் , சூரிய சக்தி மின்உற்பத்தி நிலையம், நடமாடும் மின் நிலையம் , திரையரங்கு என பல்வேறு வசதிகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

இதேவேளை தற்போது ஆர்ப்பாட்டகாரர்களால் கோட்டா கோ கம விளையாட்டுத் திடலும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. (நி-6)

# அதிக விலைக்கு அரிசி விற்றால் அபராதம்

(கொழும்பு)

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் தனி உரிமையாளராக இருந்தால் 100,000 ரூபா முதல் 500,000 ரூபா வரையில் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என்றும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன் தனியார் நிறுவனம் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்தால் அவர்களுக்கு 500,000 ரூபா முதல் அதிகபட்சமாக 5 மில்லியன் ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என்று தெரிவித்துள்ளது.

மேலும் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. (நி-6)

# இலங்கைக்கு உதவும் நியூசிலாந்து

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் இலங்கை விவசாயிகளுக்கு உதவுவதற்கும் அதனால் பாதிக்கப்படக் கூடிய பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதற்கும்என 5,00,000 அமெரிக்க டொலர்களை வழங்குவதாக நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு ஆகியவற்றின் ஊடாக இலங்கைக்கு இந்த நிதியுதவி வழங்கப்படும் என நியூசிலாந்தின் வெளி விவகார அமைச்சர் நனயா மஹூதா டுவிட்டர் செய்தி ஊடாக தெரிவித்துள்ளார்.

இது இலங்கைக்கும் நியூசிலாந்துக்கும் இடையிலான 30 வருட காலஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்றும் இந்த 30 வருட காலத்திற்குள் நியூசிலாந்து இலங்கைக்கு 25.07 மில்லியன் அமெரிக்க டொலர்களை அபிவிருத்தி திட்டங்களுக்காக உதவியாக வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார். (நி-6)

# இந்திய கடன் திட்டத்தின் கீழ் 65,000 மெற்றிக் தொன் உரம்

(கொழும்பு)

இலங்கைக்கு உடனடியாக 65,000 மெற்றிக் தொன் யூரியா உரத்தை வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் இந்த யூரியா தொகை வழங்கப்படவுள்ளதாக இலங்கையில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. (நி-6)

# எரிவாயு பெற்றுத்தருமாறுகோரி மக்கள் வீதிமறியல் போராட்டம்



(கொழும்பு)

கொழும்பு - மட்டக்குளி பகுதியில் வீதி மறிக்கப்பட்டு மக்களால் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமக்கு எரிவாயு பெற்றுத் தருமாறு கோரியே இந்தப் போராட்டத்தை மக்கள் நடத்தினர்.



இந்நிலையில் எரிவாயு பெற்றுக் கொடுக்கப்படுமாக இருந்தால் வீதியிலிருந்து விலகி போராட்டத்தை முடிவிற்கு கொண்டு வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் காரணமாகவே அப் பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டதால் பதற்றமான சூழல் காணப்பட்டது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.சி.சி.வெற்றிக்கிண்ணம்

## ஓல்ட்கோல்ஸ் அணி 2 வது சுற்றுக்குத் தகுதி



கே.சி.சி.சி வெற்றிக்கிண்ணத்திற்காக கே.சி.சி.சி. விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட தொடரின் முதலாவது சுற்றின் முதலாவது போட்டி கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

ஒரு போட்டியில் ஓல்ட் கோல்ஸ் அணி, அரியாலை சென்றல் அணியை 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று 2 வது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 29.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களைப் பெற்றனர்.

நிரோஸன்-12, கிருபா-18, கோபிராம்-11, பிரிசங்கர்-91, லதுாசன்-11, ஜெரோஸன்-37, சதீஸ்-13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் ஓல்ட் கோல்ஸ் அணியைச் சார்ந்த பிரியலக்ஸன்-05 ஜின்துஸன்-02, நிரோஸன்-01 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஓல்ட்கோல்ஸ் அணி 24 ஓவர்களில் 06 விக்கெட்டுக்களை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றனர்.

திலீபன்-27, நிமலேந்திரா-116, (இத் தொடரின் முதலாவத சதம் என்பது குறிப்பிடத்தக்கது) சிவகுகன்-40, ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் அரியாலை சென்றல் அணியைச் சார்ந்த சதீஸ் -04, விதுஜன்-01, தெருஜன்-01 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

தரவரிசை பட்டியலுக்கு கிடைத்த புள்ளிகள் பின்வருமாறு, ஓல்ட்கோல்ஸ் அணி-6.52, அரியாலை சென்றல்-2.70. (4)

# இத்தாலி பகிரங்க டென்னிஸ் அரையிறுதிக்குள் ஜோகோவிச்



இத்தாலி பகிரங்க டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், போராடி வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில், செர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச், கனடாவின் பெலிக்ஸ் ஆகர் அலியாசிமை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெற்ற இப் போட்டியில், முதல் செட்டை 7-5 என நோவக் ஜோகோவிச், போராடிக் கைப்பற்றினார்.

இதனைத்தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செட்டில், ஜோகோவிச்சுக்கு பெலிக்ஸ் ஆகர் அலியாசிம் கடும் நெருக்கடி கொடுத்தார்.

இதனை சிறப்பாக கையாண்ட நோவக் ஜோகோவிச், செட்டை 7(7)-5 (1) என கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார்.

அரையிறுதிப் போட்டியில், நோவக் ஜோகோவிச், நோர்வேயின் காஸ்பர் ரூட்டை எதிர்கொள்ளவுள்ளார். (4)

# சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி பிற்போடல்

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒரு வாரத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

14 கழகங்கள் பங்குபற்றும் சம்பியன்ஸ் லீக் சுற்றுப் போட்டியை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பிப்பதற்கு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் திட்டமிட்டிருந்தது.

எனினும் நாட்டில் தற்போது ஊரடங்கு சட்டம் அமுலில் இருப்பதால் சம்பியன்ஸ் லீக்கை பிற்போட நேரிட்டதாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்தது.

சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டப் போட்டி கடைசியாக 2019 இல் நடத்தப்பட்டபோது டிபெண்டர்ஸ் எவ்சி சம்பியனானதுடன் கலம்போ எவ்சி இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தது.

கொரோனா தொற்று காரணமாக சம்பியன்ஸ் லீக் போட்டி 2020, 2021 களில் நடத்தப்படாததுடன் 3 வருடங்களின் பின்னர் இவ் வருடம் நடத்தப்படவுள்ளது.

சுமார் 70 மில்லியன் ரூபா செலவில் நடத்தப்படும் இவ் வருட சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் 14 கழகங்களுக்கும் தலா 25 இலட்சம் ரூபா வழங்கப்படும். இதனை விட சம்பியனாகும் கழகத்தக்கு 10 இலட்சம் ரூபா பணப்பரிசும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 750,000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படும்.

கிறிஸ்டல் பெலஸ் (கம்பளை). ஜாவா லேன் (கொம்பனித் தெரு), மாத்தறை சிட்டி, மொரகஸ்முல்ல,

நிகம்போ யூத், நியூ ஸ்டார் (மாளிகாவத்தை), பெலிக்கன்ஸ் (குருநாகல்), சோண்டர்ஸ் (ப்ரைஸ் பார்க்),

செரண்டிப் (மாவனெல்லை), பொலிஸ், இலங்கை போக்குவரத்துச் சபை, சொலிட் (அநுராதபுரம்), சென். மேரிஸ் (யாழ்ப்பாணம்), சுப்பர் சன் (பேருவளை) ஆகிய 14 கழகங்கள் இம்முறை போட்டியிடுகின்றன. (4)

# பெங்களூரை வீழ்த்தியது பஞ்சாப்

ஐ.பி.எல். இருபது-20 தொடரின் 60ஆவது லீக் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணி 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

மும்பையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப் போட்டியில், பஞ்சாப் கிங்ஸ் அணியும் றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பஞ்சாப் கிங்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 209 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லிவிங்ஸ்டன் 70 ஓட்டங்களையும் ஜோனி பேயர்ஸ்டொவ் 66 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், ஹர்சல் பட்டேல் 4 விக்கெட்டுகளையும் வனிந்து ஹசரங்க 2 விக்கெட்டுகளையும் க்ளென் மேக்ஸ்வெல் மற்றும் ஷபாஸ் அஹமட் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 210 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 155 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, க்ளென் மேக்ஸ்வெல் 35 ஓட்டங்களையும் ராஜட் படிதார் 26 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பஞ்சாப் கிங்ஸ் அணியின் பந்துவீச்சில், கார்கிஸோ ரபாடா 3 விக்கெட்டுகளையும், ரிஷி தவான் மற்றும் ராகுல் சஹார் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் ஹர்பிரீட் பிரார் மற்றும் ஹர்ஸ்தீப் சிங் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.



இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 29 பந்துகளில் 7 சிக்ஸர்கள் 4 பவுண்ரிகள் அடங்கலாக 66 ஓட்டங்களை பெற்றுக் கொண்ட ஜோனி பேயர் ஸ்டொவ் தெரிவுசெய்யப்பட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களை காப்பாற்ற வேண்டாம் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

**காலி முகத்திடலில் இடம்பெற்ற அமைதிப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்திய வர்களை, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சட்டத்தின் முன் கொண்டு வரவேண்டும் என்று தொழிற் சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.**

எனினும் புதிய பிரதமர், ராஜபக்ஷக்களை காப்பாற்றுவாரானால், அவருக்கு எதிராகவும் தொடர் போராட்டம் நடத்தப்படும் என்று தொழிற்சங்க பிரதிநிதிகள் எச்சரித்துள்ளனர்.

நாடு தழுவிய தொடர் போராட்டங்கள் மூலம் இளைஞர்கள் உடனடி அரசியல் சீர்திருத்தங்களையும் அமைப்பில் மாற்றத்தையும் கோருகின்றனர்.

எனவே புதிய பிரதமர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்று அரசியல் சூழலை ஸ்திரப்படுத்த வேண்டும் என்று தொழிற்சங்கங்களின் கூட்டு ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் கேட்டுக்கொண்டார்.

எனினும் பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெறுவதற்காக உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் சரத்து ஜனநாயகக் கட்டமைப்பில் சேர்க்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-6)



# ரஞ்சனுக்கு ஆதரவாக வெலிக்கடை முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்ப)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு ஆதரவாக கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலை முன்பாக நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொது மன்னிப்பு வழங்கி அவரை விடுதலை செய்ய வேண்டி போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர். (நி-6)

# சதிகாரர்களை சட்டத்தின் முன் நிறுத்துங்கள்

## இளையோர் பௌத்த சங்கம்

(கொழும்பு)

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முக்கிய பணியாக இருக்க வேண்டும் என கொழும்பு இளையோர் பௌத்த சங்கம் தெரிவித்துள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களும், அவர்களுக்கு உதவிய மற்றும் உறுதுணையாக இருந்த அரசியல் சக்திகளும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

எத்தகைய மாற்றத்தையும் எதிர்கொண்டு ஒழுக்கம் மற்றும் சட்டத்தை மதிக்கும் நல்ல சமூகத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை புதிய பிரதமர் செய்து காட்ட வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-6)

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 – 03 – 1985

மறைவு 13 – 05 – 2022

## திருமதி. சர்மி செந்தில்வேல்

ஏழாலை மேற்கு ஏழாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சர்மி செந்தில்வேல் 13.05.2022 அன்று இறைபதம் அடைந்தார். அன்னார் சத்தியநேசன், நிர்மலாதேவி (லலி) ஆகியோரின் அன்பு மகளும் அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு, பூமலர் ஆகியோரின் அன்பு மருமகளும், வடிவேல் செந்தில்வேலின் பாசமிகு மனைவியும் பவிஷன், அபிஷாளினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசந், நிஷந் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பிரதீபா, பிரபாகரன், பிரபாலினி, பிரதீகரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.05.2022 (ஞாயிற்றுக்கிழமை) இன்று முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை

குடும்பத்தினர்
076 552 0997
077 139 4183

(C-4322)

# இராசிபலன்

15.05.2022
வைகாசி 01, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 12.17 மணிவரை

சுவாதி பிற்பகல் 3.16 மணிவரை
சுபநேரம் - 8.53-10.23 மணிவரை
இராகுகாலம் -4.23-5.53 மணிவரை
பூரணை விரதம், வெசாக் பண்டிகை,

சர்வதேச குடும்ப தினம்
சந்திராஷ்டமம் - ரேவதி

வளவன்




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.




தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும்.




வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றி மறையும்.




பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு, தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




வாய்த்த நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பணத்தேவைகள் நிறைவேறும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




காரியங்களில் வெற்றி பெற கண்ணனை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்




பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இறைவழிபாட்டால் இன்பங்கள் கூடும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.




சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




உலன் நலன் சீராகி உற்சாகம் பெறுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், [illegible]




பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்




எதிர்பாராத தன விரயங்கள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுந்த காலத்தில் வாழ்வதே அதிகம் வாழ்வதாகும்.

# கட்சி சாராத ஒரு தலைவரே நாட்டிற்கு தற்போது தேவை

## பேராசிரியர் பல்லேகந்தே ரத்தனசார தேரர்

(கொழும்பு)

**நாட்டில் தனிநபரை அடிப்படையாகக் கொண்ட அரசியலுக்கு முற்றுபுள்ளி வைக்கப்பட வேண்டும். சமூகத்திலிருந்து கட்சி சாராத ஒரு தலைவரே அரச தலைவராக தெரிவு செய்யப்பட வேண்டும் என அமரபுர மகா சங்க சபையின் பொதுச் செயலாளரும் பதில் மகாநாயக்க தேரருமான பேராசிரியர் பல்லேகந்தே ரத்தனசார தேரர் தெரிவித்தார்.**

புதிய பிரதமரின் நியமனம் தொடர்பில் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடைக்கால அரசாங்கத்தின் பிரதமர் பதவியை ஏற்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடுத்தகோரிக்கையை யாரும் ஏற்கவில்லை.

இவ்வாறான நிலையில் மூத்த அரசியல்வாதி என்ற ரீதியிலும் , சர்வதேச தொடர்புகளைக் கொண்டவர் என்ற ரீதியிலும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தார்.

எனினும் இதன் ஊடாக நாட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண முடியும் என்று நாம் நம்பவில்லை.

காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களின் கோரிக்கையும் இதுவல்ல. ரணில் விக்கிரமசிங்கவினால் தற்போதுள்ள சமூக முறைமையை மாற்றியமைக்க முடியாது.

அவர் அரசியலமைப்பிற்கு முரணாகவே பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். 1948 ஆம் ஆண்டு முதல் பாதுகாக்கப்பட்டு வந்த ஜனநாயகத்திற்கு என்ன ஆயிற்று? மகா நாயக்க தேரர்கள் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை.

கட்சி சாராத ஒருவரே இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக நியமிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாத்திரமல்ல ,நாட்டில் தற்போதுள்ள எந்தவொரு அரசியல்வாதிக்கும் பொருளாதாரம் குறித்த கண்ணோட்டம் கிடையாது.

எனவே சமூகத்திலிருந்து கட்சி சார்பற்ற சிறந்த தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும் எனத் தெரிவித்தார். (4)

## மடிக்கணினி திருட்டு

(அராலி)

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவனின் மடிக்கணினி ஒன்று நேற்று முன்தினம் திருடப்பட்டது.

குறித்த மாணவன் திருநெல்வேலி பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்து யாழ். பல்கலையில் கல்வி கற்று வருகின்றார்.

இந்நிலையில் மாணவன் தனது மடிக்கணினியை ஜன்னலின் அருகே வைத்திருந்தார். இதன்போது அங்கு நுழைந்த திருடர்கள் அவரது மடிக் கணினியினை திருடிச் சென்றுள்ளனர். தனது கல்வி சம்பந்தமான பதிவுகள் அனைத்தும் அந்த மடிக்கணினியிலேயே உள்ளது என மாணவன் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தினம்-2022 நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வன் லக்ஸ்மன் லவன் தலைமையில் இடம் பெற்றது.மேற்படி நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரீகத்துறைத் தலைவர் கலாநிதி.ச.முகுந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (படம்-ரவிசாந்)



சாவகச்சேரி குருநகர் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி வார்க்கும் நிகழ்வும் அதனோடு இணைந்த அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. (படம்-சுபேசன்.கஜிந்தன்)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

நாடு எதிர்கொள்ளும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் மக்களும் என்ற தலைப்பிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் விசேட கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம் பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் விசேட உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. அகிலன் கதிர்காமர் ஆற்றவுள்ளார். ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுக்கின்றனர். (4-6)

## திருட்டு

(அராலி)

யாழ். உரும்பிராய் - கிருஷ்ணன் பகுதியில் அமைந்துள்ள கமநல சேவைகள் திணைக்களத்தில் உழவுத் தேவைக்காக வைக்கப்பட்டிருந்த கலப்பையை திருடர்கள் நேற்று முன்தினம் திருடியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (4-6-104)



வடமராட்சி கரவெட்டி செஞ்சிலுவைச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை முதலுதவி போதனாசிரியர் N.இலங்கேஸ்வரன் தலைமையில் கடந்த 1 ஆம் திகதி நடைபெற்றது. (படம்-மகாலிங்கம்)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

யாழில் தற்போது நிலவும் குருதித் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு கொக்குவில் பொற்பதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயத்தின் முன்பாக அமைந்துள்ள தனியார் இல்லத்தில் இடம்பெறும்.

மேற்படி இரத்ததான முகாம் நிகழ்வில் குருதிக் கொடையாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## வயோதிபப் பெண்ணின் 2 பவுண் சங்கிலி அறுப்பு

(அராலி)

யாழ். கல்வியங்காடு கட்டைப்பிராய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், ஜன்னலை உடைத்து வீட்டுக்குள் நுழைந்த கொள்ளைக் கும்பல் அங்கிருந்த வயோதிபப் பெண்ணின் 2 பவுண் தங்கச் சங்கிலியை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களுடன் ரணிலையும் வீட்டிற்கு அனுப்ப வேண்டும்

## ஜே.வி.பி.தலைவர் அநுரகுமார

(கொழும்பு)

**"ராஜபக்ஷக்களுடன் சேர்த்து புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும்" என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது.

"மக்களால் நிராகரிக்கப்பட்டவரே ரணில் விக்கிரமசிங்க. மக்களால் தற்போது விரட்டப்படுபவரே கோட்டாபய ராஜபக்ஷ. இவ்விருவரும் இணைந்து நடத்தும் ஆட்சி ஏற்றுக்கொள்ளக்கூடியதா? இது ஜனநாயகக் கோட்பாடுகளுக்கு எதிரான நியமனமாகும்.

ரணில் கோட்டாவை நம்புகின்றார். கோட்டா ரணிலை நம்புகின்றார். ஆனால், இவ்விருவரையும் மக்கள் நம்பவில்லை. எனவே, ராஜபக்ஷக்களுடன் சேர்த்து ரணிலையும் தோற்கடித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டும்.

2018 இல் ஆட்சிக் கவிழ்ப்பு சூழ்ச்சி இடம்பெற்றது. மகிந்த ராஜபக்ஷவைப் பின்கதவால் அழைத்து வந்து பிரதமராக்கினார் மைத்திரிபால சிறிசேன. இன்றும் அதற்கு ஒப்பானதொரு செயல்தான் நடந்துள்ளது. தமது முகாமுக்கு எதிராகச் செயற்பட்டவரை அழைத்து கோட்டா பிரதமராக்கியுள்ளார். இது மக்கள் ஆணையை மீறும் செயலாகும்.

வெள்ளை வான் கலாசாரத்தை ஆரம்பித்தவர்களுடன் இணைந்து ரணிலால், எப்படி ஜனநாயகத்துக்காகக் குரல் கொடுக்க முடியும்? எனவே, குறுகிய காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அனைத்துக் கட்சிகளினதும் நிலைப்பாடு இதுதான்" என அவர் தெரிவித்தார். (நி-6)

# ராஜபக்ஷக்கு விலைபோன ரணிலுக்கு ஆதரவு வழங்க முடியாது-இராதாகிருஷ்ணன்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் பிரதிநிதியாக செயற்படுகின்றார். அவர் ராஜபக்ஷக்களுக்கு விலைபோய் விட்டார்.

ஆதலால் அவருக்கு ஆதரவு வழங்க முடியாது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் வீ.இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட ரணில் விக்கிரமசிங்கவால் 20 ஆயிரம் வாக்குகளைக்கூட பெற முடியாமல் போனது.

தேசியபட்டியல் ஊடாக பாராளுமன்றம் வந்தார். அவருக்கு மக்கள் ஆணை இல்லை. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதே நாட்டு மக்களின் கோரிக்கை.

ஜனாதிபதி பதவி விலகினால்தான் ஆட்சி பொறுப்பேற்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்தது.

ஜே.வி.பியும் இதே நிலைப்பாட்டில்தான் இருந்தது. ஆனால் ராஜபக்ஷக்களுடன் ரணில் இணைந்துள்ளார்.

மொட்டுக் கட்சி ஆட்சிதான் வரப்போகின்றது. ராஜபக்ஷ போய், ரணில் வந்துள்ளார். இதுதான் ஏற்பட்டுள்ள மாற்றம்.

புதிய அரசில் இணைய மாட்டோம். அமைச்சுப் பதவிகளை ஏற்கமாட்டோம். எதிரணியில் இருந்து செயற்படுவோம். ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் என அவர் தெரிவித்தார். (நி-6)

# வெசாக் தினத்தை முன்னிட்டு 244 கைதிகளை விடுதலை செய்ய தீர்மானம்

(கொழும்பு)

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வழங்கப்பட்ட விசேட அரச மன்னிப்பின் கீழ் 244 கைதிகளை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று வெசாக் தினத்தை முன்னிட்டு அரசியலமைப்பின் 34 ஆவது சரத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இவ்வாறு 244 கைதிகளை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-6)

# எம்முடன் கைகோருங்கள்

## சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் கடிதம்

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்களிப்பை கோரி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் தம்முடன் இணைந்து பணியாற்றுமாறும் அவர் கடிதத்தின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க [illegible] ஏற்கமாட்டோம் என சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்த நிலையில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (நி-6)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 5 சூரி 11 செவ் 10 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc,MSc.Mphil (Computer Science) Research Assistant<br>எதிர்பார்ப்பு:படித்த பெண் அவுஸ்திரேலியா விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12652 | பிறப்பு: 1984 இந்து நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 15 சூரி 10 செவ் 3 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்:CIMA-Part Assistant Accountant<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி கணக்காளர்<br>தொ.இ: G/9565 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம் : அச்சுவினி 2<br>கி.பா: 23 ½ சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:Reading M.BA (Master of Business Management ) officer incharge<br>எதிர்பார்ப்பு :அரச.தனியார் உத்தியோகம்<br>தொ.இ: B/12655 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரி 6 செவ் 10 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Bio Medical Science -London<br>எதிர்பார்ப்பு: London விரும்பதக்கது. Australia Canada வும் ஏற்கப்படும்.<br>தொ.இ:G/9566 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 59 சூரி 5 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: NCTRS QS கனடா supervisor<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/12657 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 51 சூரி 1 செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: BIT (SLIIT) Software Engineer (Intern)<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி வெளிநாடு ஆயின் Australia, Canada, Singapore, Malaysia,UK<br>தொ.இ:G/9567 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 36 சூரி 7 செவ் 5 இல் உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி (அவுஸ்திரேலியா) பிராஜாவுரிமை பெற்றவர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/12658 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 27½ சூரி 10 செவ் 5 இல்<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில் :A/L, Management Reading (Open) எழுதுவினைஞர்-கூட்டுறவு<br>எதிர்பார்ப்பு: அரச, தனியார் தொழில்<br>தொ.இ:G/9578 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]



# திருமண சேவை

1987 கனடா, 1991 லண்டன், 1990 ஜேர்மன் பல்கலைக்கழகம் முடித்த மணமகள்மாருக்கு மணமகன்மார் தேவை.

1985, 1986, 1987, 1988, 1989, 1990 ஜேர்மனில் உள்ள மணமகன்மாருக்கு படித்த மணமகள்மார் தேவை.

1987, 1988 கனடா 1993 கனடா சூரியன் செவ்வாய் உள்ள மணமகன்மாருக்கும் மணமகள்மார் தேவை.

1984 கனடாவிலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/மணமகள் தேவை எனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும் உள்நாட்டு/வெளிநாட்டு மணமக்கள் எம்முடன் தாராளமாக உள்ளனர்.

தொடர்: 076 733 8071, 076 475 2219
Whats App 004917643399372
(1360)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதுமை ஏற்றுமதிக்கு உடனடி தடை விதித்தது இந்தியா

(டில்லி)

**வெளிநாடுகளுக்கான கோதுமை ஏற்றுமதியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்தியா தடை செய்துள்ளது.**

உலகிலேயே அதிக அளவில் கோதுமை உற்பத்தி செய்யும் நாடுகளில் இரண்டாவது இடத்தில் இந்தியா உள்ளது.

கோதுமை ஏற்றுமதியில் முதலிடத்தில் இருந்த உக்ரைனில் போர் காரணமாக கோதுமை ஏற்றுமதி முற்றிலுமாக முடங்கியுள்ளது.

இதனால் உலக அளவில் இந்தியாவின் கோதுமைக்கு கேள்வி அதிகரித்துள்ளது. இந்நிலையில் கடந்த மாதம் இந்தியாவின்கோதுமைஏற்றுமதி14இலட்சம் தொன்னாக உயர்ந்தது.

இவ்வாறான நிலையில் உள்நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்த கோதுமை ஏற்றுமதிக்கு உடனடித் தடை விதித்து இந்திய அரசு உத்தர விட்டுள்ளது.

உலக நாடுகள் பலவும் கோதுமை சீராகக் கிடைக்காமல் சிக்கலில் உள்ளன. இந்நிலையில் உள்நாட்டில் உணவுப் பாதுகாப்புத் தேவையை உறுதி செய்யும் வகையில் மத்திய அரசு ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

உள்நாட்டில் கோதுமையின் விலை உயர்ந்து வரும் நிலையில் இந்தியாவின் தடை அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி-6)

## பின்லாந்திற்கான மின்விநியோகத்தை நிறுத்தியது ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்ய எரிசக்தி விநியோக நிறுவனமான RAO Nordic பணம் செலுத்துவதில் உள்ள சிக்கல்களைக் காரணம் காட்டி, பின்லாந்திற்கு மின்சார விநியோகத்தை நேற்று சனிக்கிழமை முதல் நிறுத்தி வைப்பதாகக் கூறியுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நேட்டோவில் சேரத் திட்டமிட்டுள்ளதாக பின்லாந்து கூறியதை அடுத்து, 'பழிவாங்கும் நடவடிக்கைகளை' எடுப்பதாக ரஷ்யா மிரட்டியது.


பின்லாந்து ரஷ்யாவுடன் 1,300-கி.மீ (810-மைல்) எல்லையைப் பகிர்ந்து கொள்கிறது. மேலும் அதன் கிழக்கு அண்டை நாடுகளுடன் பகைமையைத் தவிர்ப்பதற்காக முன்பு நேட்டோ விலிருந்து விலகி இருந்தது. இருப்பினும், உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு, நேட்டோ உறுப்பினர்களுக்கான பொது ஆதரவு அதிகரித்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை நேட்டோவில் சேருவதற்கான தனது திட்டத்தை பின்லாந்து முறையாக அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி-6)

# டில்லியில் பயங்கர தீ விபத்து

## 27 பேர் பலி, 40 பேர் மருத்துவமனையில்

(டில்லி)



இந்தியாவின் மேற்கு டில்லியில் உள்ள நான்கு மாடிக் கட்டடம் ஒன்றில், நேற்று முன்தினம் மாலை ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 27 பேர் உயிரிழந்ததோடு 40 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், சுமார் 70 பேர் வரை குறித்த கட்டடத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேற்கு டில்லியான முண்டக் பகுதியின் புகையிரத நிலையத்துக்கு அருகே உள்ள ஒரு வணிக வளாக கட்டத்தில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. (நி-6)

## நியூசிலாந்து பிரதமருக்கு கொரோனா



(வெலிங்டன்)

நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டெர்னுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது என அந்நாட்டின் பிரதமர் அலுவலகம் தெரிவித்து உள்ளது.

ஜசிந்தா ஆர்டெர்னுக்கு கொரோனா வைரசுக்கான அறிகுறிகள் லேசாக இருப்பதாகவும், இதனால் அவர் ஏழு நாட்களுக்கு வீட்டில் தனிமைப்படுத்தப்படுவார் என்றும் அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்து உள்ளது.

நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா கொரோனா முதல் அலை ஏற்பட்டபோது சிறப்பாக நிர்வாகம் செய்து, அந்நாட்டை கொரோனாவில் இருந்து மீட்டது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# உக்ரைனுக்கு ஜி7 நாடுகள் கூடுதல் ஆயுத உதவி



(பேர்லின்)

போரினால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனுக்கு கூடுதல் உதவி மற்றும் ஆயுதங்கள் வழங்க ஜி7 நாடுகள் ஒருமித்த முடிவு எடுத்துள்ளன.

பணக்கார நாடுகளை உறுப்பினராகக் கொண்ட ஜி7 குழுவின் உச்சி மாநாடு ஜேர்மனியில் நடைபெற்றது. இதில், அந்தந்த நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

அப்போது ரஷ்யாவை மேலும் உலக அளவில் தனிமைப்படுத்த வேண்டும், அது ஒற்றுமையின் சக்திவாய்ந்த அடையாளம் என்று ஜேர்மனி கூறியது தொடர்பாக விவாதிக்கப்பட்டது.

இதனையடுத்து உக்ரைனுக்கு உணவு, கூடுதல் ஆயுதங்கள் உள்ளிட்ட உதவிகளை வழங்குவதற்கு அனைத்து நாடுகளும் ஆதரவு தெரிவித்தன.

அதேபோல், ரஷ்ய ஜனாதிபதி புடின் மற்றும் அவரது உறவினர்களின் சொத்துக்களை முடக்க பிரிட்டன் நடவடிக்கை எடுத்துள்ளது.

உக்ரைன் நேட்டோ அமைப்பில் சேரக்கூடாது என்பதற்காக கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி அந்த நாட்டின் மீது தாக்குதலை தொடங்கியது ரஷ்யா. முதலில் உக்ரைன் முழுவதும் தாக்குதலை நடத்திய ரஷ்யா, தற்போது கிழக்கு உக்ரைன் நகரங்களை தீவிரமாக தாக்கி வருகிறது.

இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், கனடா, ஜப்பான் போன்ற நாடுகள் பல்வேறு உதவிகளை செய்வதுடன், ரஷ்யா மீது எண்ணற்ற பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளது. (நி-6)

# தன்னம்பிக்கையை இழக்கும் புடின்

## முன்னாள் பிரதமர் கருத்து

(மொஸ்கோ)

உக்ரைனுக்கெதிரான ஆக்கிரமிப்பு போரினை முன்னெடுத்து வரும் ரஷ்யா பல வழிகளில் தனது இழப்பினை சந்தித்து வருவதாகவும் ரஷ்யாவின் ஜனாதிபதி புடின் தன்னம்பிக்கையை சிறிது சிறிதாக இழந்து வருவதாகவும் ரஷ்யாவின் முன்னாள் பிரதமர் மிகைல் கஸ்யனோவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய தனிப்பட்ட பேட்டியின் போது கருத்து தெரிவித்த முன்னாள் பிரதமர் மிகைல் கஸ்யனோவ், போர் ஆரம்பித்த நாட்களில் காணப்பட்ட புடினின் மன நிலைக்கும் தற்போது காணப்படும் புடினின் மனநிலைக்கும் இடையில் பாரிய வித்தியாசங்கள் தோன்றுவதாகவும், புடின் மனதளவில் உக்[illegible] தோற்று விட்டார் என்[illegible] பட்ட பிரதமர், புடின் ரஷ்ய இராணுவத்தை தவறான பாதையில் வழிநடத்தி செல்வதை அவதானிக்க முடிகின்றது என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன் தற்போதைய புடினின் பேச்சுக்கள் முறையற்ற விதமாக வெளிவருகின்றன எனவும் இவ்வாறான செயற்பாடுகள் புடின் உக்ரைன் பிரச்சினையில் தன்னம்பிக்கையை இழந்து வருகின்றமையை தெளிவாக காட்டுவதாக முன்னாள் [illegible] குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 300 | 350 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 300 | 400 |
| தக்காளி | 600 | 700 | 600 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 140 | 120 |
| கோவா | 200 | 250 | 280 | 300 |
| கரட் | 180 | 300 | 400 | 400 |
| பூசணி | 80 | 80 | 120 | 120 |
| புடோல் | 200 | 240 | 200 | 240 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 400-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 170 | 180 | 200 | 200 |
| பாகற்காய் | 500 | 700 | 600 | 500 |
| வெண்டக்காய் | 200 | 180 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 190 | 160 | 200 |
| பயற்றங்காய் | 450 | 500 | 600 | 300 |
| லீக்ஸ் | 200 | 230 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 200 | --- | 400 |
| கறிமிளகாய் | 450 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 1000 | 1200 |
| போஞ்சி | 450 | 600 | 700 | 600 |
| கத்தரிதம்புள்ள | 280 | 200 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 150 | 150 |
| தேசிக்காய் | 700 | 600 | 500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 | 160 |
| வெங்காயப்பூ | 400 | 600 | --- | 360 |
| முள்ளங்கி | 80 | 200 | --- | 280 |
| பொன்னாங்கண்ணி | 60 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | --- | --- | --- | 150 |

நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும்
வழிவகை செய்யுங்கள்.
– சர் ரோஸாலெஸ்ட் ரேஞ்ச்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தென்னிலங்கைத் திருவிழாவில் கை(தவற)விடப்பட்ட ஈழத் தமிழர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்காகக் காலிமுகத்திடலில் கருக்கட்டிய தொடர் போராட்டம் மகிந்த ராஜபக்ஷவை வெளியேற்றியதோடு அமைதி கொண்டுள்ளது.

என்ன செய்வது காலம் பிழைத்தால் கறுத்தார்தான் என்ன செய்ய முடியும்.

ஆம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைக்கு வந்த அஸ்திரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைப் பதம் பார்த்தது.

இதனை நாம் கூறும்போது, அப்படியானால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தப்பிக்கொண்டாரா? என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால், இல்லை அவருக்கான எதிர்ப்பு சற்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதை மட்டும் கூறமுடியும்.

அதாவது கோட்டாபய ராஜபக்ஷ தொடர்ந்து ஜனாதிபதியாக இருப்பதை சிங்கள மக்கள் ஒருபோதும் விரும்பவில்லை.

மாறாக, தென்பகுதியில் நடந்துமுடிந்த களேபரத்தின் உச்சம் அவர்களின் போராட்டத்தை அமைதிப்படுத்தியுள்ளது.

அமைச்சர்கள் உள்ளிட்ட அரச பிரதானிகளுக்குச் சொந்தமான வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு பெரும் அனர்த்தம் நடந்து முடிந்தது.

இதற்கும் மேலாக, ஆர்ப்பாட்டக் களத்தில் சிக்குண்டு உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளயின் மரணம் தொடர்பில் வெளிவருகின்ற செய்திகள் மிகப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்த வல்லன.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தை தணிப்பது தவிர்க்கமுடியாததாகின்றது.

இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரணில் விக்கிரமசிங்கவை அவசரமாக அழைத்து நாட்டு நிலைமை பற்றிக் கலந்துரையாடிய பின்னர் அவரைப் பிரதமராக்கினார்.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க பிரதமராகுவதன் பின்னணியில் வெளிநாடுகளின் வகிபங்கு உண்டென்பது மறுக்க முடியாத உண்மை.

பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க, மிகப்பெரும் இராஜதந்திர அஸ்திரத்தை காலிமுகத்திடலை நோக்கி எய்தார்.

ஆம், காலிமுகத்திடலில் நடக்கும் போராட்டம் தொடரட்டும். அதனை எவரும் தடுக்கக் கூடாது. தடுக்கவும் விடமாட்டோம் என்பதாக அந்த அஸ்திரத்தில் வாசகங்கள் பொறிக்கப்பட்டன.

இதன்காரணமாகவும் காலிமுகத்து கோசம் அமைதியடைய, அவசர அவசரமாக வெளிநாட்டு உதவிகளைப் பிரதமர் ரணில் பெற்று வருகிறார்.

விரைவில் எரிபொருளும் எரிவாயுவும் இரசாயன உர வகைகளும் வந்துசேரும்.

அந்தளவுக்கு வெளிநாடுகள் இலங்கைக்கு உதவ மும்முரமாக உள்ளன.

ஆனால், தென்னிலங்கைத் திருவிழாவில் எம் ஈழத் தமிழர்கள் கை(தவற)விடப்பட்டவர்களாக ஆகிவிட்டதுதான் மிகப்பெரிய வேதனையும் கொடுமையுமாகும்.

# சர்வ கட்சிகளின் ஒத்துழைப்பை பிரதமர் ரணில் பெறவேண்டும் சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் சர்வ கட்சிகளின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அறிக்கை ஒன்றை விடுத்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு பிரதமர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியமை முக்கியமான விடயமாகும் என குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மக்களின் நம்பிக்கையை பெற்றுக் கொள்ளும் வகையில் பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் அமைய வேண்டும்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பி, நாட்டின் பொருளாதாரத்தை மாற்றக் கூடிய ஒன்றிணைந்த அரசாங்கம் உருவாக்கப்படவேண்டும் எனவும் சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4)

## மன்னார் மீனவர் கடலில் விழுந்து பலி

(மன்னார்)

நேற்று முன்தினம் மன்னார் சௌத்பார் பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடலில் விழுந்து காணாமல் போன நிலையில் நேற்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் மன்னார் எமில் நகர் பகுதியைச் சேர்ந்த கிரிஸ்தோபர் ஜாக்லின் வயது 29 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கடலுக்குள் விழுந்த நிலையில் உள்ளூர் மீனவர்கள் மற்றும் கடற்படையினர் இணைந்து குறித்த நபரை தேடும் பணியில் ஈடுபட்டனர் .

எனினும் குறித்த நபர் மீட்கப்படாத நிலையில் நேற்று சனிக்கிழமை காலை தொழிலுக்குச் சென்ற மீனவர்களினால் குறித்த மீனவர் சடலமாக மீட்கப்பட்டார். (4)

## புதிய இராணுவ சோதனைச்சாவடி உதயம்

(நெளுக்குளம்)

வவுனியா ஏ9 வீதி கொக்குவெளி பகுதியில் புதிய இராணுவ சோதனைச்சாவடி ஒன்று நேற்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை குறித்த பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக குறித்த சோதனை சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் ஏற்கனவே ஓமந்தை, நெடுங்கேணி, பம்பைமடு, ஈரப்பெரியகுளம் பகுதிகளில் இராணுவ சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4,299)

## புகையிரதத்தில் இயந்திர கோளாறு; பேருந்தில் பயணித்த மக்கள்

(நெளுக்குளம்)

மதவாச்சியில் இருந்து மன்னார் சென்ற புகையிரதத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டமையால் பொதுமக்கள் அசௌகரியங்களை சந்தித்தனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் மதவாச்சி பகுதியில் இருந்து தலைமன்னார் நோக்கி பயணித்த குறித்த புகையிரதத்தில் இயந்திர கோளாறு ஏற்பட்டமையால் வவுனியா ஆண்டியாபுளியங்குளம் பகுதியில் பழுதடைந்து நின்றது.

நீண்ட நேரமாகியும் புகையிரத கோளாறு சீர் செய்யப்படாமையினால் அதில் பயணித்த பொதுமக்கள் பேருந்துகளில் ஏறிதமது பயணத்தினை தொடர்ந்தனர். (4,299)

## செம்மலை கடலில் மாயமான மூன்றாவது நபரின் சடலமும் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - செம்மலை கடலில் நீராடச் சென்ற நிலையில், நீரில் இழுத்துச் செல்லப்பட்டு காணாமல்போயிருந்த மூன்றாவது இளைஞனின் சடலம் நேற்று காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.


கடந்த 10ஆம் திகதி செம்மலை கடலில் நீராட சென்ற ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சகோதரர்கள், கடல் அலையில் இழுத்து செல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர்.

இந்த நிலையில், கடந்த 11ஆம் திகதி இரண்டு சகோதரர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், மூன்றாவது சகோதரரின் சடலம் கற்பாறையில் சிக்குண்டு இருந்த நிலையில், நேற்று மீனவர்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. (4)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## எதிர்ப்பு இல்லாமல் இறைபணி சாத்தியமாகுமா?



ஆனால் தேவன் நிர்ணயித்த காலம் வரும்வரை இயேசுவை எதிர்ப்பாளர்களால் நெருங்க முடியவில்லை (லூக்.19:47, 48), (லூக்.22:53).

இறைபணியில் இருந்தவர்களை தண்டிக்க வரும்போது தான் சவுலை இயேசு சந்தித்தார் (அப்.9:1-4).கிறிஸ்தவர்களை தண்டிப்பது, தன்னை துன்புறுத்துவது போன்றது என்று அவனிடம் கூறினார்.ஆனால் இன்று அப்படிப்பட்டவர்களை இயேசு சந்திக்கிறாரா? இயேசுவின் போதனைகளை அப்படியே கடைப்பிடித்த அன்றைய கிறிஸ்தவனுக்கு அவர் அன்று துணை நின்றார். இன்றைய நிலை வேறா? 'சத்துருக்களை சிநேகியுங்கள், துன்பப்படுத்துகிறவர்களுக்காக ஜெபம் பண்ணுங்கள் ' என்ற அவரது போதனைகள் பின்பற்றப்படுகின்றனவா?மாறாக, துன்புறுத்துகிறவர்களை எதிர்த்து போராடி , அதிகாரிகளிடம் குற்றம் சாட்டி, புகார் கொடுத்துவழக்கு தொடர்கிறோமா? கிறிஸ்தவ வாழ்க்கை துன்பம் மிகுந்தது (2 தீமோ.3:12).அதைப் பொறுமையோடு ஏற்பதில் தான் வெற்றி இருக்கிறது (லூக்21:17-19).

உலக அரங்கில் இறைபணியில் இருந்த எத்தனையோ பக்தர்கள் கொலை செய்யப்பட்டனர்.இயேசுவும் இயற்கை மரணத்தை தழுவவில்லை.துன்பங்களைக் கண்டு இறுதிவரை மாறாமல் இறைவனுக்காக உண்மையான பக்தன் கொலை செய்யப்பட்டான் என்றால். அது அவனுக்குக்கிடைத்த இரட்சிப்பு என்று வேதம் கூறுகிறது(மாற்கு 13:12,13). அப்படி ஒருவன் இரட்சிப்பைப் பெற்று சொர்க்கம் அடைந்தான் என்றால்,அவனது வாழ்வின் நோக்கம் நிறைவேறி, வெற்றி கிடைத்து விட்டது என்று அர்த்தம்.அது மகிழ்ச்சியான சம்பவம். இந்த உலகத்தில் மேலும் நேரிட இருக்கும் தொல்லைகளுக்குத் தப்பிவிட்டதால் அவன் பாக்கியவான்தானே.

இறைபணியில் எதிர்ப்பும் உயிரிழப்பும்அனுமதிக்கப்பட்டவையே. அதைக் கண்டு புலம்பாமல், அவர்களின் உறவினர்களை பராமரிக்க முன்வர வேண்டும். பகைப்பவர்களை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது இயேசு அவர்களை சந்தித்து மனம் திரும்பும்படி செய்வார். இல்லாவிட்டால், அவரது விருப்பப்படி தண்டிப்பார். மனிதர்களை எதிர்த்துப் போராட இறைபக்தர்களுக்கு அனுமதி இல்லை. (எபே.6:12). ஒரு குருவி கூட இறைவனின் சித்தம் இல்லாமல் சாகாது(மத்:10:29).அப்படியானால் இறைபணியில் இருப்பவர்களின் சாவும் அவருக்குத் தெரியாமல் நடக்காது. சிந்திப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறக்குமதி, கடன்களில் பயனில்லை

# சுய பொருளாதாரமே நாட்டிற்கு நன்மை

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(முறிகண்டி)

**இறக்குமதி மற்றும் கடன்கள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது எனவும், சுய பொருளாதாரத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அது சாத்தியமில்லை எனவும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்று அவரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இவ்விடயத்தினை தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

70களில் இலங்கையில் ஏற்பட்ட பஞ்சம் பட்டினி போல அடுத்தடுத்த வாரங்களில் இலங்கையில் ஏற்படலாம் எனவும் கூறப்படுகின்றது. இந்த நிலையில்தான் புதிய பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுள்ளார்.

முதலில் ராஜபக்ஷ குடும்பம் குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி செல்ல வேண்டும் எனக் குரல் கொடுத்தவர்களில் ஒருவராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இருந்தார்.

அவருடைய கோரிக்கைகள் இப்பொழுது காற்றிலே பறக்க விடப்பட்டு அதே ராஜபக்ஷ அரசில் பதவியேற்றிருக்கின்றார். ஆனால் அவரது காலத்தில் சிலர் பொருளாதார மாற்றங்கள் வரும் என்று நம்புகின்றார்கள். பசில் ராஜபக்ஷ பொறுப்பேற்ற காலத்திலும் இவ்வாறுதான் செய்திகள் வந்தன. ஆனால் இலங்கையில் பொருளாதாரம் அதலபாதாளத்திற்குள் சென்றது.

அதனைக் கட்டியெழுப்ப நீண்ட காலங்கள் செல்லும். அதாவது மக்கள் தாம் வாழ முடியும் என்று நம்பிக்கை கொள்ளக்கூடிய சுய பொருளாதார சூழல் ஏற்பட வேண்டும். அதற்கான உர வகைகள் உள்ளிட்ட விடயங்களை மேற்கொண்டு கொடுக்கும் போது தான் பொருளாதாரம் ஓரளவு முன்னிலையை கொடுக்கும் எனத்தெரிவித்தார்.(4-6-100-316)

## வெற்றிலைக்கேணி கொலைச் சம்பவம் கைதான நபருக்கு விளக்கமறியல்

(குருமபுரம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் அண்மையில் ஆண் ஒருவரது சடலம் புதைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது.

இந்நிலையில் கடந்த 12 ஆம் திகதி கொலை சம்பவத்துடன் தொடர்புடைய கொலை குற்றவாளி சட்டத்தரணி ஒருவருடன் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

அவர் அன்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு பின் 14 நாள் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டார்.

குறித்த சம்பவமானது குடும்பத் தகராறு காரணமாக இடம்பெற்றது என கைதானவர் வாக்குமூலம் வழக்கியுள்ளார். கைதானவர் கொலை செய்யப்பட்டவரின் மனைவியின் தம்பி எனத் தெரிவித்தார். (4-6-316)



முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தின் மூன்றாவது நாள் நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுச் சனிக்கிழமை காலை யாழ்.நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலய வளாகத்தில் அமைந்துள்ள விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்டோரின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி முன்பாக அனுஷ்டிக்கப்பட்டது. (படம் : ரவிசாந்)

# கட்சி தாவவுள்ள கபீர், அப்புஹாமி?

(கொழும்பு)

கபீர் ஹாசிம், ஹெக்டர் அப்புஹாமி உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் இணைய உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

அதேவேளை பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்கி வரும் சுனில் பிரேமஜயந்த. நிமல் சிறிபால டி சில்வா மற்றும் நிமல் லன்சா ஆகியோர் நேற்று மதியம் பிரதமரின் செயலகத்திற்குச் சென்று பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# எரிபொருளுக்கு வரிசையில் நிற்பதால் நாளாந்த தொழில்கள் பாதிப்பு

## பொதுமக்கள் கவலை



(தருமபுரம்)

தற்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருளுக்கான நெருக்கடி நிலைமை காரணமாக நாளாந்தம் எரிபொருள் விநியோகிக்கப்படாத காரணத்தினால் எரிபொருள் பெறுவதில் பலத்த சிரமத்தை எதிர்நோக்குவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எரிபொருள் பெற வேண்டுமாயின் அதிகாலை 2 மணிக்கு எழுந்து வரிசையில் நின்று காலை 10 மணி அளவில் எரிபொருள் பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக தமது நாளாந்த தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

நேற்று விசுவமடு பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் 2 கிலோ மீற்றருக்கும் அதிகமான தொலைவில் வரிசையில் நின்று எரிபொருளை பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காலை 7 மணிக்கு பின்னரே எரிபொருள் வழங்குவதாக தெரிவித்துள்ளனர் எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் வந்தவுடன் மக்களுக்கு உடனடியாக தாமதமின்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-316)

# வீட்டு வளவினுள் புகுந்து மரம் வெட்டியவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் விளானைகளபூமி பகுதியில் ஒருவரது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் வீட்டு வளவினுள் காணப்பட்ட பெறுமதி மிக்க மரங்களை வெட்டி திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக அறிந்த வீட்டு உரிமையாளர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

முறைப்பாட்டையடுத்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் குறித்த வீட்டு உரிமையாளரின் சில பெறுமதி மிக்க பொருட்கள் கடந்த வருடமும் இதே கும் பலால் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(4-6)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தினை முன்னிட்டு நடைபவனி

(ஏறாவூர்)

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தினை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலையில் பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையிலான நடை பவனியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் இந்த நடை பவனியில் அனைத்து தமிழ் உறவுகளையும் கலந்து கொண்டு ஆதரவு வழங்குமாறு வடகிழக்கு மாகா[illegible]ந்து காணாமல் ஆக்கப்ப[illegible]வுகளின் அம்பாறை மாவட்ட தலைவி திருமதி.தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமைய[illegible] அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 நடை பவனியானது பொத்துவிலில் ஆரம்பித்து நாளை திங்கட்கிழமை திருகோணமலை நோக்கி செல்லும்.

பின்னர் திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவினை சென்றடைந்து நாளை மறுதினம் முல்லைதீவிலிருந்து முள்ளிவாய்க்காலுக்கு சென்று அங்கு உயிர்நீர்த்த. படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டு நினைவேந்தல் வாரம் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

இதேபோன்று யாழ்ப்பாணத்திலிருந்தும் நடை பவனி ஆரம்பமாகி 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலினை வந்தடையும் என தெரிவித்தார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாமரத்தால்...

தவறி வீழ்ந்து பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் இடம்பெற்ற இச் சம்பவத்தில் மானிப்பாய், சங்குவேலி தெற்கைச் சேர்ந்த நாகேந்திரம் நகுலேந்திரன் (வயது- 48) என்ற 6 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

மாமரத்தில் 25 அடி உயரத்தில் ஏறி கொப்பு வெட்டும்போது அவர் நின்ற கொப்பு முறிந்ததால் தவறி வீழ்ந்துள்ளார்.

கீழே வீழ்ந்து சுயநினைவற்றுக் காணப்பட்ட அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (4.18)

## 5 மணிக்கு...

தெரிவித்துள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் வழங்கப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி பொது வீதி, புகையிரதப் பாதை, பொதுப் பூங்கா, பொது விளையாட்டு மைதானம் அல்லது கடற்கரையில் தங்குவதற்கு மற்றும் நடமாடுவதற்கு அனுமதி இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள காலப் பகுதியிலும் இரவு 7 மணி வரை தனியார் சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஒசுசல உள்ளிட்ட மருந்து விநியோக நிலையங்களை திறப்பதற்கு அனுமதி வழங்கப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயக அலுவலகம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4)

## புதிய அமைச்சர்...

வும் ஜி.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சராகவும் பதவியேற்றுள்ளனர்.

இதேவேளை பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராகவும் காஞ்சன விஜேசேகர மின்சக்தி-எரிசக்தி அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ளனர். (4)

## அமரகீர்த்தி...

கலவரமாக மாறியது.

இதனால் ஆத்திரமடைந்த காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்கள் உட்பட நாட்டு மக்கள் பலர் ஒன்றிணைந்து அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் வீடுகளை எரித்து சாம்பலாக்கினர்.

இதன்போது ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான அமரகீர்த்தி அத்து கோரளவை அவரது இலத்தில் பொது மக்கள் சுற்றிவளைத்தனர்.

இதன்போது அவர் தன்னிடம் இருந்த துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்தார் எனச் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் அவரது உடலுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டதில் அவர் ஆர்ப்பாட்டக்காரர்களால் அடித்தே கொல்லப்பட்டுள்ளார் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (4)

## பாராளுமன்ற...

காரிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பிற்காக தலா இரண்டு T-56 ரக துப்பாக்கிகளை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு வழங்குமாறும் பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற அமைதியின்மையின் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. (4)

## ரணிலின்...

பிரேரணைகளுக்கு ஆதரவளிப்பதாக சுமந்திரன் பதில் வழங்கியதாக தென்னிலங்கை ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், சட்ட சீர்திருத்தக் குழுவிற்கு தலைமை தாங்கும் பிரதமர் ரணிலின் யோசனைக்கு சுமந்திரன் இணங்கியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (4)

## போராட்டக்...

யிலும் தொடர்கின்றது.

இந்நிலையில் பிரதமராக பதவியேற்ற ஐக்கியதேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க "கோட்டா கோ ஹோம்" போராட்டத்திற்கு இடையூறு ஏற்படுத்தப்படாது என அறிவித்திருந்தார்.

இந்நிலையில் பிரதமர் தற்போது "கோட்டா கோ ஹூம்" போராட்ட தளத்தை பராமரிப்பதற்கான குழுவொன்றையும் நியமித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு மேயர் ரோசி சேனாநாயக்க, ருவான் விஜேவர்தன மற்றும் சுகாதார அமைச்சு, இராணுவம் மற்றும் பொலிஸ் பிரதிநிதிகள் அடங்கிய பிரிவிற்கு "கோட்டா கோ ஹூம்" வளாகத்திற்கு தேவையான வசதிகளை வழங்குவது குறித்து ஆராயுமாறு பணித்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை போராட்டம் நடத்தும் இளைஞர்கள் முன்வைக்கும் நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும், போராட்டத்தளங்கள் மீது ஒடுக்குமுறை முயற்சிகள் நடைபெறாது என்றும் பிரதமர் உறுதியளித்தார். (4)

## பிரதமர் ரணில்...

தும் நலன் கருதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசுக்கு ஆதரவு வழங்க முடிவெடுத்துள்ளேன் எனத் தெரிவித்தார். (4)

## அரச ஆதரவு...

போதே அவர் இதனைக் கூறினார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான இஷாக் ரஹ்மான், எச்.எம்.எம்.ஹரீஸ், எம்.எஸ்.தௌபீக் மற்றும் பைசல் காசிம் ஆகியோரே தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர். (4)

## முள்ளிவாய்க்...

அத்துடன் அப்பகுதியில் புலனாய்வாளர்களும் காணப்படுவதுடன் நேற்றைய தினம் அப்பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் ஒருவரையும் அச்சுறுத்தியுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் செய்யப்படலாம் என்ற நிலையில் மக்கள் அச்சமடைய செய்யும் நோக்குடன் பொலிஸார் அங்கு செல்பவர்களை அச்சுறுத்தும் விதமாக இராணுவத்தினர், இராணுவப் புலனாய்வாளர்களுடன் இணைந்து தங்களுடைய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். (4)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


# பிரதி சபாநாயகருக்கு பெரமுனவிலிருந்து அஜித் ராஜபக்ஷ முன்மொழிவு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தினமன்று பிரதி சபாநாயகர் தெரிவு நடைபெறவுள்ளது.

இந்நிலையில் குறித்த பதவிக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் அஜித் ராஜபக்ஷவின் பெயரை முன்மொழிவதற்கு அக்கட்சியினுள் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

பொதுஜனபெரமுனவின் உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பின்போதே அஜித் ராஜபக்ஷவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

முன்னதாக பிரதமர் பதவியை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டதன் பின்னர் குறித்த பதவி தெரிவின்போது பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து யாரையும் நிறுத்துவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டபோதும் தற்போது அந்த தீர்மானம் மாற்றியமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# இலங்கைக்கு உதவுங்கள்

## பன்னாட்டு தூதுவர்களிடம் சஜித் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் முன்னோக்கிய நகர்வுக்கு ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பன்னாட்டு தூதுவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தோடு நாடு எதிர்கொண்டுள்ள தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பிலும் எதிர்க்கட்சி தலைவர் தூதுவர்களிடம் கலந்துரையாடினார்.

இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ்சைபி, ஜேர்மன் தூதுவர் ஹோல்கர் லோதர் சியுபர்ட், பிரான்ஸ் தூதுவர் எரிக் லவேர்ட், நெதர்லாந்து தூதுவர் தஞ்சா கோங்க்ரிஜ்ப், இத்தாலி தூதுவர் ரீட்டா கியுலியானா மானெ ல்லா, ரோமானிய தூதுவர் விக்டர் சியூ ஜெடா உள்ளிட்ட தூதுவர்கள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# நாட்டில் சீரற்ற காலநிலை

## விமானப்படை தயார் நிலையில்

(கொழும்பு)

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்பட்டால் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளை வழங்குவதற்காக விமானம் மற்றும் தொடர்புடைய பணியாளர்களை அனுப்புவதற்கு இலங்கை விமானப் படை (SLAF) தயார் நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல பகுதிகளில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம் உள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளதாக விமானப்படையின் திணைக்களத்தின் பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார். (4)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1734 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022 / 05 / 09 | தினம் திங்கட்கிழமை
அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக, 2022.05.09 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த 'சுப்பர் போல்' லொத்தர் சீட்டுகளுக்கான சீட்டிழுப்பு அன்றைய தினம் நடைபெறவில்லை. அதற்கான சீட்டிழுப்பு 2022.05.14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.
வெற்றி சுழுக்கும் இலக்கங்களும்
S 04 35 39 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 60,388,521/-
அபிவிருத்தி லொத்தர் சபை

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக, 2022.05.09 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த 'அத கோடிபதி' லொத்தர் சீட்டுகளுக்கான சீட்டிழுப்பு அன்றைய தினம் நடைபெறவில்லை. அதற்கான சீட்டிழுப்பு 2022.05.14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.
அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,921,980/-
வெற்றி இலக்கங்கள் 05 36 39 53 ஆங்கில எழுத்து J
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக, 2022.05.09 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த 'சனிதா' லொத்தர் சீட்டுகளுக்கான சீட்டிழுப்பு அன்றைய தினம் நடைபெறவில்லை. அதற்கான சீட்டிழுப்பு 2022.05.14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.
சனிதா Shanida
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.05.09
சீட்டிழுப்பு இல: 3885
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,913,580/-
வெற்றி இலக்கங்கள் 05 10 12 32 ஆங்கில எழுத்து L
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 2022-05-09
சீட்டிழுப்பு வாரம் 3446
வர்ணம் மஞ்சள்
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,195,527/-
வெற்றி இலக்கங்கள் 08 30 33 37
மேஷம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,266,340/-

12 அதிர்ஷ்டம்
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 18 08 18 27 71
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 910
வர்ணம் இள நீலம்
திகதி 2022.05.09 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 236,300,533/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS — புதிய பிரிவுகள் ஆரம்பம்

(11279)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.

TP: 077 780 3970, 074 007 1970



# ENGLISH WORLD

**Group and Personal Classes**

யாழ். பிரபல ஆசிரியர்களுடன்.....
தரம் 6 முதல் O/L வரை
கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், வரலாறு
ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
**தரம் 3,4,5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

(11364)

தொடர்பு :- கட்டைப்பிராய்ச் சந்தி, கட்டைப்பிராய்.
077 193 0298



## Happy Supermarket - உரும்பிராய்

உரும்பிராயிலுள்ள Super market ஒன்றிற்கு கீழ்வரும் Vacancy இற்கு ஆட்கள் தேவை.

- **Supervisor - ஆண்கள்/ பெண்கள்**
  Full Time
  எதிர்பார்ப்பு : Super market இல் வேலை செய்த அனுபவம் தேவை.
  வயதெல்லை : 25 – 35
- **Cashier - பெண்கள்**
  Full Time
  எதிர்பார்ப்பு : A/L மற்றும் Super market இல் வேலை செய்த அனுபவம் தேவை.
- **Track and Bulk Maintenance - பெண்கள்**

(11371)

**Happy Super market**
உரும்பிராய்

✆ - 077 780 8030


# பொருளாதாரம் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு ஆதரவளிக்க தயார்

## பிரதமரிடம் சஜித் எடுத்துரைப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கத்தால் பொருளாதாரம் தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு எதிர்க்கட்சி ஆதரவளிக்கும் என பிரதமர் ரணிலிடம் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணிலுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை புதிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மறுப்பு தெரிவித்துள்ளார்.

ராஜபக்சக்கள் இல்லாத அரசாங்கம் அமைய வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கை என எதிர்க்கட்சித் தலைவர் தனது கடிதத்தில் பிரதமருக்கு நினைவூட்டியுள்ளார். (4)

# திருகோணமலையில் ஆணொருவரின் சடலம் மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட லிங்க நகர் கடலில் ஆணொருவரின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளதாகத் துறைமுக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மீன்பிடி நடவடிக்கைக்காக கடற்தொழிலாளர்கள் கடலுக்குச் சென்ற நிலையில், சடலம் மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்கு தகவல்வழங்கியுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் திருகோணமலை இலிங்க நகர் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட சண்முகநாதன் கருணாகரன் (வயது-49) எனவும் தெரிய வருகின்றது.

குறித்த சடலம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைத் துறைமுக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)


## காணி விற்பனைக்கு

கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு (11376)
077 601 1135



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
(C-4313)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம். / V2 TRAVELS

0777-068-777



## சிறுநீரகம் தேவை

46 வயதுடைய O பொசிற்றிவ் இரத்த வகையைச் சேர்ந்த ஒருவருக்கு உடனடியாக சிறுநீரகம் தேவை.

(C-4323)

076 877 3780
076 395 6263



## ஆசிரியர் தேவை

புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக தரம் 6–11 வரை தமிழ், விஞ்ஞானம், கணிதம் உட்பட சகல பாடங்கள் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவைப்படுகின்றனர்.

(11365)

தெல்லிப்பளை - 077 834 3666
விசுவமடு - 076 004 4882


# மரண அறிவித்தல்

தோற்றம் 27 – 03 – 1950



மறைவு 14 – 05 – 2022

## இராசதுரை யோகேந்திரன்

மானிப்பாய் ஆனந்தா வீதியைப் பிறப்பிடமாகவும் இல. 82/15, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை யோகேந்திரன் அவர்கள் நேற்று (14.05.2022) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - அரியமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும் சறோயினிதேவி (கிளி) அவர்களின் பாசமிகு கணவரும் அனோஜன், காலஞ்சென்ற தசந்தன் மற்றும் டிக்சன், சுகன்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராசேந்திரன், காலஞ்சென்ற இராசா, அம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (16.05.2022) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(11377)

இல. 82/15, பருத்தித்துறை வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 076 656 6823 தகவல் :- குடும்பத்தினர்

# கண்ணீர் காணிக்கை

அன்னை மடியில் 08 . 03 . 1985



ஆண்டவன் அடியில் 13 . 05 . 2022

அமரர்

## திருமதி சர்மி செந்தில்வேல்

சின்னஞ் சிறு வயதினிலே
சிட்டுக் குருவியாய் பறந்து
புன்னகை முகத்தாள்
கயல் விழியாள் - சர்மி
பாதிவழியில் கணவனைக் கைவிட்டு
குஞ்சுக் கிளிகள் இரண்டும்
கொஞ்சிவிளையாடும் நேரத்தில்
பெற்றவரும் உடன்பிறப்பும்
உறவுகளும் அயலவரும்
கதறி அழ காணாமல்
பறந்து மறைந்தது ஏனோ அம்மா!

அன்னார் காலமான செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைவதோடு அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(C-4325)

திரு. க. சிவானந்தராசா
(செல்வம் மாமா) குடும்பத்தினர்

# விபத்து; ஒருவர் பலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மைலம்பாவெளியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மைலம்பாவெளி, காமாட்சியம்மன் ஆலய வீதியில் இடம்பெற்ற விபத்தில் தன்னாமுனையை சேர்ந்த 40 வயதுடைய முத்துலிங்கம் சிவாகரன் என்னும் குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

வேகமாகவந்த மோட்டார் சைக்கிள் வேககட்டுப்பாட்டை இழந்து கம்பிவேலியில் மோதியதன் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 60.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 343

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 | 15.05.2022 | தொலைபேசி : 021 222 3378









## ஊழ்வினை வந்துறுத்தும்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். ஈழத்தின் மூத்த எழுத்தாளரும் தமிழ் அறிஞரும் நல் மனிதருமாகிய மயிலங்கூடலூர் பி.நடராஜன் காலமானார். அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. விதானையார் விசுவலிங்கம் எழுந்து முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தை நினைவு கூர்ந்தார்.

எங்கட மக்களுக்குச் செய்த கொடுமையை இண்டைக்கு மகிந்த தரப்பு அனுபவிக்கிறது. இந்த நாட்டில மகிந்தவின்ர தலை தெரிந்தாலே அவருக்குத் தண்டனை கொடுக்க சிங்கள மக்கள் அனைவரும் தயாராக இருக்கினம்.

போரை நடத்திய கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று நாட்டைப் போட்டுடைத்து விட்டார்.

இப்ப அவரால் நாட்டை ஆள முடியாத நிலைமை வந்திட்டுது. அதால ரணில் விக்கிரமசிங்கவிட்ட பிரதமர் பதவியை ஒப்படைத்துப் போட்டு ஒரு வெறுவிலியாக கோட்டா இருக்கிறார்.

**மூப்பர்:** இப்படியொரு கேவலமான கட்டம் உலகில எந்த ஆட்சியாளருக்கும் வந்திருக்காது.

**கங்காணி:** ஜனநாயக வழியில போராட்டம் நடத்தின மக்கள் மீது குண்டர்களை ஏவி விட்டுத் தாக்குதல் நடத்திய மகிந்த ராஜபக்ஷ, ஜோன்சன் பெர்னாண்டோ போன்றவர்களை ஏன் இன்னமும் பொலிஸார் கைது செய்யவில்லை.

**வாத்தியார்:** இதுதானே இலங்கையின்ர நடைமுறை.

இந்தாப் பாருங்க தென் பகுதியில அரசியல்வாதிகளின்ர வீடுகளை எரித்த போதும் பொலிஸார் மேல் வெடி கூட வைக்கவில்லை. ஆனால் தென்னிலங்கையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில நூறில ஒரு பகுதியேனும் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்தால் கூட, பொலிஸார் கண்ட பாட்டில சுட்டுத் தள்ளியிருப்பினம்.

ஆக, சிங்களம், தமிழ் என்ற பேதமை இருக்கும் வரைக்கும் இந்த நாடு உருப்படமாட்டாது.

**சாத்திரியார்:** அதுசரி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக வந்திருக்கிறார். இலங்கையைத் தூக்கி நிறுத்துவாரோ.

**விதானையார்:** பிரதமர் ரணிலுக்கு வெளிநாடுகளோட நல்ல தொடர்பு இருக்கிறபடியால, உலக நாடுகள் அவருக்காக உதவிகள் செய்யும். அந்த உதவிகள் கிடைக்கத் தொடங்கிற்று என்பதையும் காண முடிகிறது.

**விதானையார்:** எதுக்கும் பொறுத்திருந்து பார்ப்பம். அநுரகுமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ ஆகியோர் ரணிலைப் பிரட்டுவினம்.

ஆகையால, ரணில் விக்கிரமசிங்கவின்ர பதவி குறுகிய காலத்தைக் கொண்டது என்பதுதான் உண்மை.



## பிரதமர் ரணில் இலங்கையை தூக்கி நிறுத்துவாராமே?

**கங்காணி:** விதானையார் சொல்லுறது உண்மைதான். மகிந்தவின்ர எடுபிடி சுப்பிரமணியம் சுவாமியும் ரணிலைப் பிரட்ட வேணும் என்பதில உறுதியாக இருப்பார்.

பிரதமர் பதவியை மகிந்த இராஜினாமாச் செய்ததால பெரும் கவலைப்பட்டவர்களில சுப்பிரமணியம் சுவாமி முதன்மையானவர். அவர் எப்படியும் மகிந்த ராஜபக்ஷவைக் காப்பாற்ற வேணும் என்பதில உறுதியாக இருக்கிறார்.

**மூப்பர்:** நீங்கள் என்ன சொன்னாலும் இனி சுப்பிரமணியம் சுவாமியால இலங்கைக்கு வர முடியாது. அவர் இலங்கைக்கு வந்தால், சிங்கள மக்கள் அவருக்கு இங்கதான் சமாதி கட்டுவினம்.

**சாத்திரியார்:** அதுசரி தெரியாமல்தான் கேட்கிறன் இனிக் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருப்பதற்கு மக்கள் அனுமதிப்பினமோ.

**விதானையார்:** நீங்கள் நினைக்கிற மாதிரி மக்கள் இல்லை. அவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் வீட்டிற்கு அனுப்பிப் போட்டுத்தான் விடுவினம்.

பிள்ளையள் செய்த குற்றத்திற்காக மகிந்த, கோட்டா ஆகியோரின் தந்தையார் டி.ஏ.ராஜபக்ஷவின்ர சிலையை அடித்து விழுத்தின மக்கள்; மகிந்தவின் பூர்வீக வீட்டை எரியூட்டின மக்கள், இவையளைச் சும்மா விடுவினம் எண்டு நினைக்கிறியளோ.

**சாத்திரியார்:** விதானையார் இதெல்லாம் ஊழ்வினைப் பயன் பாருங்கோ.

மாவீரர்களின்ர கல்லறைகளை இடித்து அழித்த மகிந்தராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின்ர பெற்றோர்களின் நினைவுச் சின்னங்களையும் உருவச் சிலையையும் மக்கள் இடித்து அழித்திருக்கினம் எண்டால்; இப்படி நடக்குமெண்டு யாரும் கனவு கண்டிருப்பினமோ. நாங்கள் நினைக்காததெல்லாம் நடந்தாகுது.

**பண்டிதர்:** நடக்க வேண்டிய தண்டனையெல்லாம் நடந்தாகுது. ஆனால் இவையெல்லாம் ஏன்? நடக்குது என்பதை சிங்களப் பேரினவாதிகள் இன்னமும் உணர்ந்து கொள்வதாக இல்லை.

அதிலும் குறிப்பாக இப்ப பிரதமராகப் பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்கவிட்ட, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற சிந்தனை அறவே கிடையாது.

**மூப்பர்:** அது பரவாயில்லை. பிரச்சினைக்குரிய தீர்வைக் காணாத வரைக்கும் இடையிடையே தென்னிலங்கை எரியத்தான் செய்யும்.

**சிறாப்பர்:** அதுசரி தென் பகுதியில ஒரு கூட்டம் திரண்டு யாரைத் தாக்கினாலும் அவரை உள்ளாடையோட இருக்க விடுகிற ஒரு கலாசாரம் இருக்குது. அதற்கு என்ன காரணம்.

**சாத்திரியார்:** அதைத்தான் பரி நிர்வாணம் எண்டு சொல்லுறதாக்கும். சாத்திரியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் சிரிப்பொலி எழுந்தது. அந்த சிரிப்பொலிக்கு மத்தியில்,

என்ன இருந்தாலும் தமிழர்கள் ஒருபோதும் எவரையும் உள்ளாடையோட இருக்க விடாயினம். எங்கயாவது ஒரு துண்டைத் துணியை எடுத்து சம்பந்தப்பட்டவருக்குக் கொடுத்து, நிர்வாணமாக இருக்காத எண்டு அவற்ற மானத்தைக் காப்பாற்றுவினம். இதுதான் தமிழ் மக்களின்ர உயர்ந்த சால்பு.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்டத்தை அஸ்திரமாக்கிய ரணில்

**" ரணில் விக்கிரமசிங்கவின் மீள்வரவினால் தமிழர்களுக்கு என்ன நன்மையென்று பார்த்தால், இன்னொரு பெரும் ஆபத்து காத்திருக்கிறது என்றே கணிப்பிட முடிகிறது. பிரதமராகப் பதவியேற்க ஒரு சில நாட்களுக்கு முன்னர், "இனிமேல் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் எவ்வித தொடர்பும் இல்லை" என்று ரணில் சொல்லியிருந்தார். "**

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரேயொரு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலின்போது வீசிய ராஜபக்ஷ பெருஞ்சூறாவளியில் முதலில் தூக்கிவீசப்பட்டவர் ரணில் விக்கிரமசிங்கதான். இனி அவருக்கு மீட்பே இல்லை, தன் சொந்தத் தொகுதியில்கூட வெல்ல முடியாத நிலைக்கு அரசியலில் சரிவைச் சந்தித்துவிட்டார் எனக் கடுமையான விமர்சனங்களையும் எதிர்கொண்டார். இந்தச் சரிவோடு அவரோடு ஒட்டியிருந்த பலரும் கட்சி மாறினார்கள். இவ்வாறு தனித்துவிடப்பட்டிருந்தவருக்குக் கட்சிக்குக் கிடைக்கவேண்டிய தேசியப்பட்டியல் ஏன்ற ஓர் அதிர்ஷ்டம் கிடைத்தது.

**ரணிலின் ஆளுமை**

தேசியப்பட்டியலின் மூலம் மிகவும் தாமதமாக பாராளுமன்றத்திற்குள் நுழைந்த ரணில் விக்கிரமசிங்க தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை அஸ்திரமாகப் பயன்படுத்தினார். அதுவேதான் ரணிலின் ஆளுமைப் பாணி. பதற்றமின்மை, அவசரப்படாமை, பொறுமை, அவமானங்களுக்கு உணர்ச்சிவயப்படாமை, விமர்சனங்களை இயல்பாக எடுத்துக்கொள்ளல், தெளிவான தூரநோக்கு போன்ற ஆளுமைப் பண்புகளை நிரம்பப்பெற்றவரான ரணில், நிதானமாகக் காய்களை நகர்த்தினார்.

கடந்த இரண்டு வருடங்களுக்குள் பாராளுமன்றத்திற்குள் பல ஆட்சிக் குழப்பங்கள், கட்சி தாவல்கள் நிகழ்ந்தபோதிலும், அவர் தனியே நின்றார். அவ்வப்போது இலங்கை எதிர்கொள்ளப்போகும் பொருளாதார இடர்கள் குறித்த தெளிவூட்டலை ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் வழங்கிக்கொண்டிருந்தார்.

ராஜபக்ஷக்களின் ஊழல், வினைத்திறனற்ற நிர்வாகம், கொரோனா பாதிப்புக்கள் போன்றன சிங்கள மக்களால் சிங்கள மக்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்ட அரசாங்கம் படுதோல்வி கண்டது.

இலங்கை வரலாற்றில் என்றும் நிகழ்ந்திராத பொருளாதாரச் சரிவினால் சிங்கள மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். சேமிப்பற்ற - அன்றாடம் உழைப்பதை அன்றே உண்டு, களித்து வாழும் அவர்களது வாழ்க்கை முறையை இந்தப் பொருளாதாரச் சரிவு மிகமோசமாகப் பாதித்தது. ஓரளவுக்கு அரசியல் தெளிவுள்ள சிங்கள மக்களின் நடுத்தர வர்க்கத்தினர் இந்நிலைமையை விளங்கிக்கொண்டு, இதற்கு காரணகர்த்தாக்கள் ராஜபக்ஷவினரே என்ற முடிவுக்கு வந்தனர்.

எனவேதான் ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கினர். சமநேரத்தில் இந்தப் பேரிடரில் இருந்து தம்மை மீட்டு வரக்கூடிய ஒரே நபர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற நம்பிக்கையையும் அவ்வப்போது வெளிப்படுத்தினர். ரணிலின் இந்த நம்பிக்கைக்கு, ரணில் விக்கிரமசிங்க சர்வதேசத்துடன் கொண்டிருக்கின்ற நல்லுறவுதான் காரணம்.

**சர்வதேசத்தை அரவணைக்கும் ரணிலின் திட்டம்**


ஆட்சியில் இருந்தாலும், ஆட்சியில் இல்லாவிட்டாலும் அவருடன் தொடர்பை பேணியபடிதான் இங்கிருக்கின்ற தூதரகங்கள் இயங்குகின்றன. இலங்கைத்தீவு என்ன பிரச்சினையை எதிர்கொண்டாலும் அது குறித்து கருத்துக் கேட்கப்படுபவர்களில் முதல் நபராகவும் அவர் இருக்கிறார்.

மேற்கு சார்ந்த திறந்த பொருளாதாரக் கொள்கையிலும் வெளியுறவுக் கொள்கைகளிலும் மென்போக்கைக் கடைபிடிப்பவராயும் இருக்கின்றமையால்தான் சர்வதேச நாடுகள் ரணிலை விரும்புகின்றன. ரணிலின் இம் மென்முகம்தான் இப்போது இலங்கைக்குத் தேவைப்படுகின்றது என்பதை சிங்கள மேற்தட்டு, நடுத்தர மக்கள் நன்கறிந்து வைத்திருக்கின்றனர்.

ராஜபக்ஷக்கள் மேற்குநாடுகளுடன் கடைப்பிடித்த வன்முகம் தான் இன்றைய இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதை விளங்கி வைத்திருக்கின்றனர். இலங்கை அரசியலின் போக்கைத் தீர்மானிக்கும் இந்த வர்க்கத்தினரை, சிங்கள ஆட்சியாளர்கள் அறிந்து வைத்திருக்கின்றனரோ இல்லையோ, மேற்கு நாடுகள் நன்றாக ஆழமறிந்து வைத்திருக்கின்றன. அவர்தம் நாடியறிந்து தமக்கு சாதகமான தரப்பொன்றை இலங்கையின் அதிகார பீடத்தில் வைத்துக்கொள்வதில் எப்படியோ வென்றுவிடுகின்றன.

**ரணில் விக்கிரமசிங்கவின் மீள்எழுச்சி**

ரணில் விக்கிரமசிங்கவின் மீள் எழுச்சியின் பின்னாலும் இந்த அரசியலே வேலைசெய்திருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகியிருக்கின்றார். அதுவும் ஓர் ஆச்சரியமிக்க பிரதமராக



நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜனநாயக முறைப்படி மக்களால் வாக்களிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் ஒருவர் பிரதமராக வருவதே நியாயமானது. மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவரைத் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக்கி, அவரையே பிரதமராக்கி அழகு பார்ப்பதெல்லாம் இத்தீவில் மட்டுமே நடக்கும் ஆச்சரியம்.

நிறைவேற்று அதிகார பலமுடைய ஜனாதிபதி தனக்கிருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி இதுபோன்று மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மக்கள் ஜனநாயகம் மீது வைத்திருக்கும் நம்பிக்கை பலவீனமடையும். எந்த ராஜபக்ஷவினர் தேவையில்லை என மக்கள் நிராகரித்தார்களோ, அவர்களை மீள அரியணை ஏற்றவும் இதேபோன்றதொரு அதிகாரத் துஷ்பிரயோகத்தைப் பயன்படுத்தவும் வாய்ப்புள்ளது.

மக்கள் ஜனநாயக முறைப்படி இதனை எதிர்ப்பினும், சில நாட்கள் ஊரடங்கும், சுட்டுத்தள்ளுவதற்கான அனுமதியும் அப்போராட்டங்களை வலுவிழக்கச் செய்துவிடும். இதனாலேயே தற்போதைய எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, பௌத்த பிக்குகள் சிலர், கோட்டா கோகம போராட்டக்காரர்களில் சிலர் இந்த நியமிப்பைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். புதிய பிரதமருக்கு எதிராகவும் போராடத் தயார் என்கின்றனர். இதற்கெல்லாம் ரணில் விக்கிரமசிங்க, "சரி போராடுங்கள். எக்காரணம் கொண்டும் பொலிஸார் உங்களை அகற்ற மாட்டார்" எனப் பதிலளிக்கிறார்.

"இப்போது செய்யவேண்டியது பெரும்பான்மை நிரூபிப்பல்ல, மக்கள் மூவேளை பசியாறுவதும், நலிவடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதுமே ஆகும்" என்கிறார். இந்த ஒற்றைப் பதிலில், மேற்கு நாடுகள் விரும்பும் ஜனநாயகப் பாதுகாவலர் தான் என்பதை இங்கிருக்கின்ற தூதரகங்களுக்கும், போராடுவதற்கான சகல உரிமையும் உங்களுக்கு உண்டு என்பதை போராட்டக்காரர்களுக்கும் ரணில் சொல்லிவிட்டார். அதுதான் அவரின் அரசியல்.

ரணில் போன்றதொரு ஜனநாயகவாதி ஆட்சி பீடமேறினால் ஸ்திரர்மானதொரு அரசாங்கம் அமையும் என மேற்கு நாடுகள் நம்புகின்றன.

ஸ்திரமான ஆட்சியமைந்தால், சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, அமெரிக்கா, இந்தியா என ரணிலை விரும்பும் நாடுகள் நன்கொடைகளை - கடன்களை வாரிவழங்கத் தயாராக இருப்பதையும் இந்நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மீளவும் ஜனநாயகம் மலர்ந்தால், சுற்றுலாத்துறை புத்துயிர் பெறும். ஏனைய ஏற்றுமதித்துறைகளும் முன்னேற "கோட்டா கோ கம" போராட்டக்காரர்களது பிரதான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும். முடிவில் ரணில் விக்கிரமசிங்கவினால், சிங்களவர்களுக்கே உரிய சுபீட்சமானதொரு நாடு கிடைத்துவிடும். அந்த சுபீட்சத்தின் கூப்பில் குந்தியிருந்தபடி ராஜபக்ஷக்களை சிங்கள மக்கள் கூவியழைத்து ஆட்சி பீடமேற்றுவர். இதுவொரு அரசியல் சங்கிலியாகத் தொடரும்.

(6 ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### ஏன் போகவில்லை?





(நேற்றைய தொடர்ச்சி)

அவன் தனக்கு தர்பாரில் இடமும் கிடைக்காமல், தான் நீலகண்டனை விடத் தாழ்வாக நடத்தப் படுவதாக எண்ணிப் பொறாமை கொண்டே இந்திரபுரிக்குச் செல்ல மறுத்தானா?

இதனால் அவனை செய்நன்றி மறந்தவன், அறிவற்றவன், பொறாமைக்காரன் என்றெல்லாம் கூறலாமா? எனது இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் சரியான விடைகள் தெரிந்திருந்தும் நீ பதில் கூறாவிட்டால் உன் தலை வெடித்து சுக்குநூறகி விடும்" என்றது.

விக்கிரமனும் "நீ சொன்ன காரணங்களால் பாலகிருஷ்ணன் தனக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை உதறித் தள்ளி விடவில்லை. அவன் தன் ஊருக்குப் போக முடிவு செய்தது மிகவும் சரியே. சந்திரலேகா அவனிடம் ஒரு வார்த்தை கூடக் கேளாமல் அவனை இந்துமதியோடு அனுப்புவதாகக் கூறினாள். இது வெகுவாக பாலகிருஷ்ணனின் மனதைப் புண்படுத்தி விட்டது. ஏதோ அடிமை வியாபாரம் போல தன்னை இந்துமதியிடம் ஒப்படைத்து அதற்கு பதிலாக சந்திரலேகா அவளது கிளியை வாங்கிக் கொண்டது அவன் மனதை உறுத்தியது. ஏற்கனவே நீலகண்டன் தர்பாருக்கு வந்த பின் தான் புறக்கணிக்கப்படுவதாக எண்ணிய அவனுக்கு சந்திரலேகாவின் இந்த செயல் அவன் தன்மானத்தைப் பெரிதும் பாதித்தது. ஒரு கலைஞன் தன் கலையைத்தான் தன் செல்வமாகக் கருதுவான். அதை ரசிப்பவர்களைக் கண்டு மகிழ்வான். கலையை வியாபாரப் பொருளாக்கி பேரம் பேசினால் அது கண்டு அவன் மனம் கொதிக்கும். இரு அரசகுமாரிகளும் அவ்வாறு பேசி முடிவு எடுத்ததை அவன் விரும்பவில்லை. அதனால் அவன் அரசகுமாரிகளிடையே இருக்க விரும்பாமல் தன் கிராமத்திற்கே போய் விடத் தீர்மானித்தான். இது சரியான முடிவே" என்றான்.

விக்கிரமனின் சரியான இந்த பதிலால் அவனது மௌனம் கலையவே அவன் சுமந்து வந்த உடலோடு வேதாளம் உயரக் கிளம்பிப் போய் மீண்டும் முருங்க மரத்தில் ஏறிக் கொண்டது.

(முற்றும்)

## கம்பராமாயணம்

### கிர்கிந்தா காண்டம்

101



சேனைகளைத் திரட்டுதல்

கார்காலம் கடந்தது, எனினும், குறிப்பிட்டபடி குரங்கினத் தலைவனாகிய சுக்கிரீவன் படைகளோடு வந்து சேரவில்லை. அதனால், வெகுண்டு எழுந்த இராமன் இலக்குவனிடம், "சுக்கிரீவன் காலம் தாழ்த்துவது ஏன்? கடமையை மறந்து கள்ளுண்டு மயங்கிக் கிடக்கின்றான் போலும் சொன்ன சொல் தவறியவனைத் தவறாமல் தண்டிப்பது கடமையும் ஆகும்"

"பெறுவதற்கு அரிய அரச செல்வம் பெற்றபின் அரச போகத்தில் ஆழ்ந்து, செய்நன்றி மறந்து விட்டான், போகட்டும்; நம் வீரம் அவனுக்கு நினைவில் இருக்க வேண்டுமே! சத்தியம் தவறியவனைக் கொன்று அழிப்பது தவறு அன்று, எதற்கும் நீ சென்று அவன் கருத்தினை அறிந்துவா" என்றான்.

"அறத்தை நிறுவக் கையில் வில்லுண்டு; வில்லில் தொடுப்பதற்கு விறல் மிக்க அம்பு உண்டு; அவன் உயிரைக் கவர, நம்பால் வீரம் உண்டு என்பதைச் சொல்லி விட்டு வா; அவன் சாவை விரும்பி ஏற்கிறான் என்பது தெரிகிறது".

"சீதையைத் தேடுவதற்காக உடனே புறப்பட்டு வரட்டும்; இல்லை என்றால், அவனும் அவ்வானைக் குடியும் அழியும் என்பதை அறிவித்துவிட்டு வா". "அவசரப்பட்டு உன் ஆவேசத்தைக் காட்டாமல் அவன் சொல்லும் பதிலைத் தெரிந்துவா" என்று சொல்லி அனுப்பினான் இராமன்.

இராமன் இட்ட கட்டளையைச் சிரமேற்கொண்டு கிட்கிந்தை நோக்கிப் புறப்பட்டான் இலக்குவன்; மலைகளையும் குன்றுகளையும் கடந்து, குறுக்கு வழியில் கிட்கிந்தையை அடைந்தான்; இலக்குவன் சீற்றத்தோடு வருவதைக் கண்ட அங்கதன், அதிர்ச்சி அடைந்தான்; நேரே சுக்கிரீவன் தங்கியிருந்த அரண்மனையை அடைந்தான்.

தன் சிற்றப்பன் அற்பத்தனமாய்க் குடித்து மயங்கி ஆழ்ந்த துயிலில் கிடப்பதைப் பார்த்தான். தாழ்ந்த கூந்தலும் மேலாடை நெகிழ்ந்த நிலையும் உடைய இளம் பெண்கள், அவன் கால்களை வருடிக் கொண்டு இருக்க, மென்மையான சுகத்தோடு அவன் மோகத்தில் ஆழ்ந்திருப்பதை அறிந்தான்.

உள்ளே நுழைந்து, உரத்த குரலில் இலக்குவன் வருகையை அறிவித்தான் இடி இடித்தாலும் அசையாதவனாய் அவன் மயக்கத்தில் கிடந்தான்.

இவன் சொல் வதை அவன் வாங்கிக் கொள்ளும் மன நிலையில் இல்லை; குடி போதையில் எந்த போதமும் ஏறவில்லை; "கடமையைப் பற்றிப் பேசினால் கடலை ஒருபடி விலை என்ன?" என்று கேட்பது போல அவன் முணுமுணுப்பு இருந்தது.

அங்கதன் அனுமனை அடைந்து, அடுத்து நடப்பது குறித்து ஆலோசனை செய்தான் அன்னை தாரையை அணுகி, நிலைமையைத் தெரிவியுங்கள் என்று அனுமன் அறிவுரை கூறினான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாசர் பதில்கள்



இழந்த இரண்டு இலட்சம் உயிர்களுக்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடுமா வியாசரே?





ரணில் விக்கிரமசிங்க பிரதமராவார் என்று கனவு கூட காணவில்லை வியாசரே?

**திவ்வியன் — தர்மக்கேணி**

**நாட்டில் நடைபெறுவதை பார்க்கும் போது என்ன தோன்றுகிறது வியாசருக்கு?**

மனிதன் உலகத்தில் வாழும் காலம் மிகக் குறைவானது. அந்தக்குறுகிய காலத்தில் மற்றவர்களுக்கு துன்பம் இழைக்காமல், மற்றவர் மனம் பாதிக்கப்படாமல், மற்றவர் சொத்துக்களில் ஆசை கொள்ளாமல் நம் கையை நம்பி நமது உழைப்பில் தர்மத்தின் வழி நின்று முன்னுக்கு வர வேண்டும்.
ஆனால் அது எதுவும் இந்த நாட்டில் அதி உச்சப் பதவியில் இருந்தவர்களால் கடைப்பிடி க்கப்படவில்லை.
மற்றவர்களின் சொத்துக்கள் மீது ஆசை கொண்டு, மனிதம் கொஞ்சமுமின்றி மனச் சாட்சி இன்றி செயற்பட்டால் என்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.நாம் சிந்தும் வியர்வைக்கு மட்டுமே பலன் கிடைக்கும்.

**சிவம் — வதிரி**

**மக்கள் வாழ்வதற்கு தகுதியற்ற பூமியாக இலங்கை மாறுகின்றது போல தெரிகின்றது வியாசரே?**

பொருட்களின் விலையேற்றம் என்பது யாருக்கும் கட்டுப்படுவது போலத் தெரியவில்லை.
அண்மையில் ஒரு அங்காடிக் கடைக்குச் சென்றிருந்தேன். சன்சில்க் சம்போ ஒன்று வாங்கினேன். கடையில் வேலை செய்யும் நபர் ஒரு விலையைக் கூறினார்.
நான் பணம் கொடுக்கத் தயாரான போது கடை முதலாளி டேய் அது பழைய விலையடா என்று கூறிவிட்டு எனக்கு கூறிய விலையின் இரண்டரை மடங்கு அதிக விலையைச் சொன்னார்.
நானும் பணத்தை கொடுத்து விட்டு வீட்டுக்கு சென்று பொருளைப் பார்த்தேன். அதில் பழைய விலையே அச்சிடப்பட்டிருந்தது.
இதுதான் இன்றைய நிலை. மக்கள் வயிற்றில் அடித்து கொள்ளை இலாபம் உழைப்பவர்கள் இருக்கும் நாட்டில் எப்படி மனிதர்கள் வாழ முடியும் சொல்லுங்கள்.

**தேவசகாயம் — யாழ்ப்பாணம்**

**தெய்வம் நின்றறுக்கும் என்பது...?**

அது அந்தக்காலம் அப்பா. இப்போதெல்லாம் தெய்வம் அன்றறுக்கும் என்பதே உண்மையானது.
வன்னிப் பெரும் நிலப்பரப்பில் ஒரு சிறிய பகுதிக்குள் மக்களை முடக்கி அவர்கள் தலைமேல் குண்டுகளைக் கொட்டி கொத்துக்கொத்தாய் தமிழினத்தை கொன்றொழித்த பாவத்தை சர்வதேசம் கேட்கவில்லை.
இறைவா இந்தக் கொடியவர்களுக்கு தீர்ப்பை நீ வழங்கு என்று தமிழினம் ஒட்டுமொத்தமாய் இறைவனிடம் கோரி விட்டு அமைதியானது.
தற்போதைய நிலைகளைப் பார்த்தீர்களா? இறைவனின் தீர்ப்பில் இருந்து யாரும் தப்பிக்க முடியாது.
அதிலும் பாதிக்கப்பட்டவர் கண்முன்னே அன்றே தன் திருவிளையாடலைக் காட்டியிருக்கிறார் இறைவன்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**021 567 1532**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**குமார் — யாழ்ப்பாணம்**

**இழந்த இரண்டு இலட்சம் உயிர்களுக்கும் அர்த்தம் இல்லாமல் போய்விடுமா வியாசரே?**

ஒரு நாளும் இல்லைக் குமார். மே மாதம் தமிழின அழிப்பின் மாதம். கொத்துக்கொத்தாய் தமிழினம் மாண்ட மாதம்.
எங்கள் உயிர்களைக் காப்பாற்ற யாரும் இல்லையா என்று துஞ்சித் துடித்து தமிழினம் மாண்டு போன மாதம்.
ஆனால் பெரும்பான்மை இனத்திற்கு அது வெற்றி விழா மாதம். இந்த மே மாதத்தில் வெற்றி விழாவை பெரும்பான்மை நிம்மதியாய் ஒரு நாள் கூட கொண்டாட இயற்கை இடம்கொடுக்கவில்லை.
இறுதியில் அதே மே மாதம் எவர்கள் தமிழினத்தின் உயிர் மாய காரணமானார்களோ அவர்களையே மக்கள் ஓடஓட விரட்டக்கண்டோம்.

**சுதன் — குப்பிழான்**

**சோறு கேட்ட மக்களுக்கே இந்த நிலை என்றால் நாட்டைக்கேட்ட நமக்கு என்னவெல்லாம் செய்திருப்பார்கள் வியாசரே?**

போர் உக்கிரமாக நடந்து கொண்டிருக்கிறது. 12 வயதுள்ள ஒரு சிறுவன் மேலாடையின்றி சிறிய காற்சட்டையுடன் படையினரின் பகுதிக்குள் வருகிறான். அவன் ஒரு பாதுகாப்பு அரணுக்கடியில் இருத்தி வைக்கப்படுகிறான்.
அவனுக்கு உண்பதற்கு பிஸ்கட் வழங்கப்படுகிறது. தன் தந்தை, தாய், சகோதரர்களை இழந்ததைக் கூட உணரத் தெரியாத அந்தப் பிஞ்சு பிஸ்கட்டை உண்டு கொண்டிருக்கிறது.
சிறிது நேரத்தில் ஓர் அறிவிப்பு, அந்தப் பிஞ்சு உயிரை எடுக்கும் படியான உத்தரவு.
டுமீல்... டுமீல்.. டுமீல்... பத்து நிமிடங்களுக்கு முன் பிஸ்கட் கொடுத்த அதே கரம் அந்தப் பாலகனை சுட்டு வீழ்த்துகிறது. எதுவும் அறியாத அந்த பாலகன் துடிதுடித்து மடிந்து போகிறான்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**அறவழி போராட்டங்களை அடக்கி ஒடுக்குவது எந்த வகையில் நியாயமானது வியாசர் அவர்களே?**

காணாமல் போனவர்களின் உறவுகள் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று எமக்கு பதில் சொல்ல வேண்டும் என்பதை வலியுறுத்திய போராட்டம் வருடக்கணக்கைக் கடந்து இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
அதற்கு இந்த அரசு எந்தத் தீர்வையும் சொல்ல வில்லை.
தற்போது அரசுக்கு எதிரான அறவழிப் போராட்டக் களத்திற்கு சென்ற குண்டர் கூட்டம் காலிமுகத் திடலையே துவம்சம் செய்தது.
அது பெரும் கலவரமாக மாறி இலங்கை வரலாற்றை திருப்பிப் போடும் அளவில் நிலை மாறியது.
அறம் என்பதைப் பற்றி கொஞ்சமேனும் தெரிந்த வர்களிடமே பேச முடியும்.
அறம் என்றால் என்ன என்று கேள்வி கேட்பவரிடம் போய் எதைக் கேட்க முடியும்.

**ரி.எவ்.கே. — யாழ்ப்பாணம்**

**மூவினங்களும் இனிமேல் ஒற்றுமையாக வாழ்வதற்கான சாத்தியங்கள் உண்டு போல தெரிகிறதே?**

நீங்கள் அப்படி நினைக்கிறீர்கள். ஆனால் உண்மை எது தெரியுமா? சிங்கள மக்களுக்கு தமது சோற்றில் கை வைத்தபடியால் தான் இந்த அரசுக்கு எதிராக போராடத் தலைப்பட்டனரே தவிர வேறு எந்தக் காரணமாகவும் அல்ல.
இப்போது திடீரென தமிழ் மக்களுக்கான சுயாட்சியை வழங்க நாங்கள் தயார் என ஆட்சியாளர்கள் அறிவித்தல் விடுப்பார்களாயின் உடனடியாக அது தமிழினத்துக்கெதிரான போராக மாறும்.
இதைப் புரிந்து தமிழ் மக்கள் நடந்து கொள்ள வேண்டும் என்பது இந்த வியாசரின் தாழ்மையான கருத்து.

**தேவர் — வவுனியா**

**ரணில் விக்கிரமசிங்க பிரதமராவார் என்று கனவு கூட காணவில்லை வியாசரே?**

உண்மை. யாரும் எதிர்பார்க்காத ஒன்று நடந்திருக்கிறது.
என்ன செய்வது இந்த நாட்டை ஒரு முறையாவது ஆள வேண்டும் என ஆசைப்படும் சஜித்திற்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கவில்லையே.
ரணில் மிகச் சிறந்த அரசியல்வாதி. அரசியல் நுட்பம் அத்தனையும் தெரிந்தவர்.
யாரும் எதிர்பாராத கணப்பொழுதில் காய் நகர்த்தி பிரதமர் பதவியில் அமர்ந்து விட்டார்.
பொறுத்திருந்து பார்ப்போம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் இலங்கையில் என்ன மாற்றம் நிகழப்போகிறது என்பதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| படம் | : | அருணோதயம் |
| இயற்றியவர் | : | கண்ணதாசன் |
| இசை | : | கே.வி.மகாதேவன் |
| பாடியவர் | : | ரி.எம்.சௌந்தரராஜன் |



உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி
மனிதன் எதையோ பேசட்டுமே
மனசை பார்த்துக்க நல்லபடி உன்
மனசை பார்த்துக்க நல்லபடி

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி

கதை கட்ட ஒருவன் பிறந்துவிட்டால்
கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு
காப்பாற்ற சிலபேர் இருந்து விட்டால்
கள்வர்கள் வாழ்விலும் நியாயமுண்டு
கோட்டுக்குத் தேவை சிலசாட்சி
குணத்துக்கு தேவை மனசாட்சி உன்
குணத்துக்கு தேவை மனசாட்சி

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி

மயிலைப் பார்த்து கரடியென்பான்
மானைப் பார்த்து வேங்கையென்பான்
குயிலைப் பார்த்து ஆந்தையென்பான்
அதையும் சில பேர் உண்மையென்பார்
யானையைப் பார்த்த குருடனைப் போல்
என்னைப் பார்த்தால் என்ன செய்வேன்..சிலர்
என்னைப் பார்த்தால் என்ன செய்வேன்

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி

கடலில் விழுந்த நண்பனுக்கு
கைகொடுத்தேன் அவன் கரையேற
கரைக்கு அவனும் வந்து விட்டான்
கடலில் நான்தான் விழுந்து விட்டேன்
சொல்லி அழுதால் தீர்ந்துவிடும்
சொல்லத்தானே வார்த்தையில்லை.. அதை
சொல்லத்தானே வார்த்தையில்லை...

உலகம் ஆயிரம் சொல்லட்டுமே
உனக்கு நீதான் நீதிபதி

# அதிர்ஷ்டத்தை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ரணிலால் தமிழர்களுக்கு காத்திருக்கும் ஆபத்து**

ரணில் விக்கிரமசிங்கவின் மீள் வரவினால் தமிழர்களுக்கு என்ன நன்மையென்று பார்த்தால், இன்னொரு பெரும் ஆபத்துக் காத்திருக்கிறது என்றே கணிப்பிட முடிகிறது. பிரதமராகப் பதவியேற்க ஒரு சில நாட்களுக்கு முன்னர், "இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் எவ்வித தொடர்பும் இல்லை" என்று ரணில் சொல்லியிருந்தார்.

பொதுவாக சிங்களவர்கள் ரணில் விக்கிரமசிங்கவை நிராகரிப்பதற்கு, அவர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படக் கூடியவர், அவர்களுடன் இணைந்து நாட்டைப் பிரித்துக் கொடுத்து விடுவார் போன்ற காரணங்களை முன்வைப்பர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஊடாக மேற்கொள்ளப்பட்ட ரணில் மீதான விமர்சனமும், அதற்கு அவர் கொடுத்த பதிலடியும் சிங்கள மக்கள் மத்தியில் நன்றாகவே எடுபட்டன. ஆனால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் தற்போது மேல் நிலையில் உள்ளவர்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்குமான உறவு ஏழேழு பந்தமுடையது என்பதை தமிழ் மக்கள் அறிவர்.


கடந்த நல்லாட்சியின் போது ரணில் விக்கிரமசிங்கவின் பதவியைக் காப்பதற்காக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் என்னென்ன பொய்களையெல்லாம் அவிழ்த்தெரிந்தார்கள் என்பதையும் தமிழ் மக்கள் நன்றாகவே நினைவு வைத்துள்ளனர்.

**புலிகளை வலுவிழக்கச் செய்த தந்திரம்**

இவ்வாறு கூட்டமைப்பினர் ரணில் விக்கிரமசிங்கவைக் காப்பாற்றிக்கொண்டு செல்வதற்குப் பிரதியுபகாரமாக அவர் தமிழர்களுக்கு எதுவும் செய்யவில்லை. சமாதான உடன்படிக்கை மூலம், தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக இருந்த விடுதலைப் புலிகளை பிளவுபடுத்தி அவர்களை அரசியலில் இருந்து அகற்றுவதற்கு மூலகாரணியாகத் தொழிற்பட்டார்.

புலிகள் தொடர்பான சர்வதேச மதிப்பீடுகளை தவறாக வழிநடத்துவதற்கும், தடைகள் மேற்கொள்ளப்படுவதற் கும் தன்னால் இயன்ற அத்தனை பணிகளையும் செய்தார். எல்லாக் காரியங்களையும் முடித்து விட்டு, ராஜபக்ஷக்களிடம் ஆட்சியைக் கையளித்தார். ராஜபக்ஷக்கள் உலகமே வெட்கித் தலை குனியுமளவுக்கு போரொன்றை அப்பாவித் தமிழர்கள் மீது நடத்தி முடித்தனர்.

கொன்றொழிக்கப்பட்ட தமிழர்களுக்கு சர்வதேச சமூகமாவது நீதியை வழங்க வேண்டும் என 2009 ஆம் ஆண்டிலிருந்து உலகத் தமிழர்கள் போராடிக்கொண்டிருக்க, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் ஆதரவோடு 2015 இல் மீள் பிரவேசமானார் ரணில். இங்கு போர்க்குற்றமுமில்லை, விசாரணையுமில்லை, எல்லாமே முடிந்து விட்டது. மிஞ்சிப்போனால் உள்ளக விசாரணை நடத்திக்கொள்கிறோம் என்கிற அளவிற்கு தமிழர் தொடர்பான சர்வதேச நிலைப்பாட்டை ரணில் கொண்டு வந்து முடித்தார். இதன் ஊடகப் பிரசாரத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொண்டே நடத்தியும் முடித்தார். அதிகாரமற்றிருந்த ராஜபக்ஷக்களுக்கு எதிராக இறுகி வந்த சர்வதேசக் கவனிப்பை கவனச் சிதைவுக்குட்படுத்தினார்.



**கரடி போல உள் நுழைந்த ரணில்**

இப்போது ராஜபக்ஷக்களின் கர்மவினை அவர்தம் சொந்த மக்களாலேயே எழுதப்படக் காத்திருந்த நேரத்தில், கரடி போல நுழைந்திருக்கிறார் ரணில் விக்கிரமசிங்க. இனிவரும் நாட்களில் பாராளுமன்றத்தினுள் பெரும்பான்மையை நிரூபித்து, ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரித்து அதில் அவர் வெற்றி பெற்றாலும், ராஜபக்ஷக்கள் எவ்வித பாதிப்புமின்றி அரங்கிலிருந்து ஓய்வுக்கு அனுப்பப்படுவர்.

ரணில் விக்கி ரமசிங்கவின் மீள் வருகையானது நீதியைக் கோரி நிற்கும் மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் தரப்போவதில்லை. அது சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழராக இருந்தாலும் சரி. ஏற்கனவே இலங்கையில் காணாமலாக்கப்பட்டோர் என்று ஒரு தொகுதியினர் இல்லை என அறிவித்து விட்டார்.

வடக்கில் 1000 பௌத்த விகாரைகளை அமைப்பதற்கான திட்டம் ஒன்று கிடப்பில் இருக்கிறது. இனி தேசிய பொருளாதார அபிவிருத்தி என்ற பெயரில் பல திட்டங்கள் நடைமுறைக்கு வரும். அத்திட்டங்கள் எஞ்சிக் கிடக்கின்ற தமிழர்கள் வளங்களையும், வள மூட்டிகளையும் சிங்கள பௌத்த தேசியவாதத்துடன் கரைத்துச் செல'லும்.

உண்மையில் ரணில் விக்கிரமசிங்க தமிழர் விடயத்தில் ராஜபக்ஷக்களைவிட மோசமானவர். தமிழ் மக்கள் அழிக்கப்பட்ட வரலாற்றை மீள்வாசித்தால், தமிழர் அழிப்பிற்கான வலையின் முதல் மூன்று முடிச்சுக்களையும் போட்டவர் ரணிலாகத்தான் இருப்பார். ஏனைய சிங்கள ஆட்சியாளர்கள் குருட்டுத்தனமாகவும், அதிகார மோகத்திலும் புத்திசாதுர்யமற்ற நிலையில் அவ்வலையை வீச நினைத்தே சிக்கிக் கொண்டனர். ஆனால் ரணில் அப்படியானவரல்ல. தெளிவான பார்வையோடு சிங்கள பௌத்த தேசியவாதத்தைக் கட்டமைத்துக்கொண்டு செல்வதில் கைதேர்ந்தவர். ஆனால் இவ்விடயத்தை சிங்கள மக்கள் இன்னமும் விளங்கிக் கொள்ளவேயில்லை என்பதுதான் உண்மை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**அகுனா தடுத் துவைக்கப்பட்டிருந்த அறையின் பக்கமாகச் சென்ற நீதனை, அகுனா பெரிய குரலில் அழைத்தான். பேச வேண்டும் என்றான். வாசல் கதவுப் பக்கமாக ஓடினான். பாதுகாப்புக்கு நின்ற இரண்டு அதிகாரிகளும் அவனை இழுத்து விழுத்தினார்கள். எங்கும் அசைய முடியாது என்று அவனை இழுத்துச் சென்று சோபாவில் போட்டார்கள்.**

## வலி சொல்லும் தொடர்... 32




முகாமில் இருள் சூழ்ந்து, அன்றைய தினம் எல்லா மூலைகளிலும் ஏதோ ஒரு மர்மம் புகைத்தெழுந்து வேலிகளின் வழியாக உலாத்திக்கொண்டிருந்தது. அன்றிரவு அகதிகள் எல்லோரும் நேரத்தோடு இரவு உணவைச் சாப்பிட்டுவிட்டு, தத் தமது அறைகளுக்குச் சென்றுவிட்டார்கள்.

அதிகாரிகளும் மேலதிக கவனத்தோடு, மணிக்கொரு தடவை வேலிகளின் வழியாக நடந்து சென்று, சோதனை செய்து, கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது இருளைக் கிழித்துக்கொண்டு முகாமுக்கு வந்த பொலிஸ் வாகனம், அகுனாவை மெதுவாக முகாம் வாசலில் இறக்கியது.

கைவிலங்கிடப்பட்ட அகுனாவை, பொலிஸார் முகாமுக்குள் நடத்தி அழைத்துவரவும், முகாமின் பாதுகாப்புத் தலைமை அதிகாரி ஜெரமி வாசல் வழியாக பொலிஸ் வாகனத்தை நோக்கிப் பாய்ந்து ஓடிப்போனார்.

அகுனாவின் முகம் வியர்த்து, வாசல் வெளிச்சத்தில் மின்னியது. குனிந்தபடி பொலிஸின் பக்கத்தில் நடந்து வந்தான். அல்பா கம்பவுண்டின் மேல் மாடியில் நின்றுகொண்டிருந்த அகதிகள், வெளியில் அகுனா அழைத்துவரப்படுவதைக் கண்டு, கூச்சலிட்டார்கள்.

அன்றிரவு, அகுனா அல்பா கம்பவுண்டிலுள்ள தனியறையில் இரண்டு அதிகாரிகளின் விசேட பாதுகாப்பின் கீழ் தங்கவைக்கப்பட்டான்.

அடுத்தநாள் காலை, அகுனா பிடிபட்டு முகாமுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டான் என்ற செய்தியோடுதான் முகாம் புலர்ந்தது. பாதுகாப்பு அதிகாரிகள் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு அகதிகளுக்கு ஏதோவொரு செய்தியைச் சொல்லுகிற தோரணையில், கடமையில் ஈடுபட்டிருந்தார்கள்.

தப்பியோடிய அகுனாவுக்கு, எங்கு ஓடுவது என்று தெரியாமல், முகாமிற்கு மிக அருகிலிருந்த 'மெக் டொனால்ட்ஸ்' உணவகத்தில் போய் நின்று பர்கர் வாங்கியிருக்கிறான்.

சிக்கன் பர்கரொன்றை அழுது அழுது சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது, அங்கு போன பொலிஸாரிடம் எந்த எதிர்ப்புமின்றி சரணடைந்துவிட்டான்.

குடிவரவுத்துறை அமைச்சின் முக்கிய அதிகாரிகள் அவனைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதற்கு முன்னர், அகுனா தடுத்துவைக்கப்பட்டிருந்த அறையின் பக்கமாகச் சென்ற நீதனை, அகுனா பெரிய குரலில் அழைத்தான். பேச வேண்டும் என்றான். வாசல் கதவுப் பக்கமாக ஓடினான்.

பாதுகாப்புக்கு நின்ற இரண்டு அதிகாரிகளும் அவனை இழுத்து விழுத்தினார்கள். எங்கும் அசைய முடியாது என்று அவனை இழுத்துச் சென்று சோபாவில் போட்டார்கள். அதைக் கண்ட நீதனுக்கு முகமெங்கும் ஆத்திரம் கொப்பளித்தது. அதை அதிகாரிகளும் கவனித்தார்கள்.

மனம் குமும்பிய ஒருவனை இவ்வாறு நடத்த வேண்டாம் என்று கோரிய நீதன், அறைக்குள் வந்து அகுனாவுக்கு ஒரு தேநீர் ஊற்றிக் கொடுத்து, சிறிது நேரம் பேசிவிட்டுப்போக அனுமதிக்குமாறு கேட்டான். அதிகாரிகளிடமிருந்து உள்ளே பொங்கிய ஆத்திரத்தை மிகுந்த சிரமத்தோடு கட்டுப்படுத்திக்கொண்டு நீதன் அந்தக் கோரிக்கையை முன்வைத்தான். அதிகாரத் தரப்புகளை வளைக்கிற முக்கிய ஆயுதமே பணிவுதான். எதிரே கேள்வி கேட்பவன் தங்களது அடிமைதான் என்ற நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டால், எந்த அதிகாரத் தரப்பும் பாதி வளைந்து விடும்.

நீதனை உள்ளே அனுமதித்தார்கள். சற்று தூரத்திலிருந்து இருவரையும் அவதானித்தபடியிருந்தார்கள் அதிகாரிகள்.

நீதனைக் கட்டியணைத்துக் கொண்டு அகுனா சிறிது நேரம் தேம்பித் தேம்பி அழுதான். அவனால் பேச முடியாத சொற்கள் அனைத்தும் கண்ணீராகக் கரைந்து, நீதனின் தோள்களில் வடிந்தன.

சிறிது நேரத்துக்குப் பின்னர் எழுந்து, ததும்பிய கண்களோடு, "என்னுடைய அண்ணா செத்துவிட்டாராம் நீதன். இவங்கள் இவ்வளவு நாளும் எனக்குச் சொல்லவில்லை" என்றான்.

அகுனாவின் கண்ணீரால் தோய்ந்திருந்த நீதனின் தோள்கள் திடீரென்று குளிரில் உறைந்தது போலானது.

"இமிகிரேஷன் ஒபீஸேர்ஸ் என்னைப் பார்க்க வரப்போகினமாம். இப்ப பார் என்ன செய் பண்ணப்போறான் எண்டு..."

அகுனா சொன்ன அந்த வசனம் அவன் உதடுகளால், இரைந்துகொண்டு வந்து விழுந்தது. அகுனா ஒரு வெப்பப் பந்தாகக் கனன்று கொண்டிருந்தான்..

அல்பா கம்பவுண்ட் அகதிகள் ஆளுக்கொரு திசையில் சிதறி ஓடினார்கள். பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அவர்களைக் கலைத்துச் சென்று, அவரவர் அறைகளுக்குள் தள்ளிப் பூட்டினார்கள். அடுத்த அறிவிப்பு வெளிவரும்வரைக்கும் யாரும் வெளியில் வரக் கூடாது என்று உத்தியோகத்தர்கள் அழுத்தமான குரலில் கட்டளை போட்டார்கள். அரைவாசி உத்தியோகத்தர்கள், தங்களுக்குள் நுரைத்துக் கொண்டிருந்த அச்சத்தை காண்பித்துவிடக் கூடாது என்பதற்காக, வெளியில் சத்தமான உத்தரவுகளை விளாசி எறிந்தார்கள்.

அகுனா தடுத்துவைக்கப்பட்டிருந்த அறையின் வாசலில் மேலதிக பாதுகாப்பு அதிகாரிகள் குவிந்து நின்றார்கள். அவர்களும் பரபரத்தபடி முண்டியடித்தார்கள். அறையின் பின் ஜன்னல் பகுதியிலும், இரண்டாவது வெளிக்கதவுப் பக்கமாகவும் இரண்டு உத்தியோகத்தர்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

இது என்ன புதிய கலவரம்? இது பற்றி எதுவும் சொல்லவே இல்லையே என்று நீங்கள் நெற்றியைச் சுருக்கலாம்.

ஆம்!

அகுனாவைச் சந்திப்பதற்காகச் சென்ற குடிவரவுத்துறை உத்தியோகத்தர்களில் ஒருவரை, கழுத்தோடு மடக்கி இழுத்து பணயக் கைதியாகப் பிடித்துவிட்டான். நான் பணிபுரிந்த காலப்பகுதியில் இந்த முகாமில் ஒரேயொரு தடவை நிகழ்ந்த புதிரான சம்பவம் இது.

ரயில் நிலையத்தில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு, இரண்டு முகாம் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன், இந்தச் சிறப்பு அறையில் தங்கவைக்கப்பட்டிருந்தபோதும் அகுனா தப்பியோடியதற்கான காரணம் உட்பட அவனது பிரச்சினைகளைக் கேட்பதற்காக வந்த குடிவரவுத் துறை அமைச்சு அதிகாரிகளில் ஒருவரை, கடும் ஆத்திரத்தில் இழுத்து, தனது நெஞ்சோடு மடக்கிப்பிடித்து வைத்திருக்கிறான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## இன்பத்தில் துன்பம்




ஆனால் மஞ்சளழகி அந்த நால்வரைப் பற்றி மட்டும் பேச்சைத் துவங்கவில்லை. அந்த நால்வர் வருகையால் அவனுக்கு என்ன ஆபத்து என்பதையும் உடனடியாக எடுத்துச் சொல்லவில்லை. பெரிய தொரு சரித்திரத்தையே சொல்ல ஆரம்பித்தாள்.

மலர் மடியில் விரல்கள் பின்னிக் கிடக்க, முடியிழைகள் சில முகத்தில் தவழ்ந்து விளையாட, கரி இமைகள் சற்றே விரிந்து மேலெழ, சமவெளி படர்ந்த தனது அழகிய விழிகளை இளையபல்லவன் மீது உயர்த்திய மஞ்சளழகி, " நீங்கள் கேட்டது சிறு கேள்விதான் வீரரே! இருப்பினும் அதற்குத் தரக்கூடிய பதில் சிறிதல்ல.

வெளி உலகம் அறியாத பல விடயங்களை எடுத்து விவரித்தால் தான் அந்த அக்ஷய முனையின் உண்மைச் சொரூபத்தை இங்குள்ள மக்கள் கூட்டங்களின் விசித்திர அமைப்பை இங்கு ஏற்படும் விபரீத நிகழ்ச்சிகளை, நீங்கள் அறிந்து கொள்ள முடியும்" என்றாள்.

இதைச் சொன்னபோது அவள் கண்களிலிருந்து சங்கடத்தையும் குரலில் இருந்த சஞ்சலத்தையும் கவனித்த இளையபல்லவன், ஒரு வேளை அக்ஷயமுனையின் அபகீர்த்திகளை அவள் அளவுக்கு மீறி மதிப்பிடுகிறாளோ, அபாயங்களை வரம்புக்கு மீறி வர்ணிக்க எத்தனிக்கிறாளோ என்று எண்ணினானாகையால், "பலதரப்பட்ட மக்கள் கூட்டமும் போட்டியும் கொலையும் பொறாமையும் அக்ஷயமுனைக்கு மட்டும் பிரத்தியேகமானதல்ல தேவி! இத்தகைய அபாய பிரதேசங்கள் உலகத்தின் பல இடங்களில் இருக்கிறன்றன," என்று கூறினான் அவளை நோக்கி.

அவன் எண்ணங்களை அவள் நொடிப்பொழுதில் புரிந்து கொண்டாள். உள்ள அபாயத்தைத் தான் மிகைப்படுத்திக் கூறுவதாக அவன் நினைப்பதைச் சந்தேகத்துக்கு இடமின்றி அறிந்துகொண்ட அவள் கேட்டாள். "இத்தகைய அபாயப் பிரதேசங்கள் பல இடங்களில் இருக்கலாம் ஆனால் அங்குய்ய அரசாங்கங்கள் அந்தப் பிரதேசங்களை என்ன செய்யப் பார்க்கின்றன?" என்று.

அவள் எதற்காக அந்தக் கேள்வியைக் கேட்கிறாள் என்பது இளையபல்லவனுக்குப் புரியவில்லைதான். அவள் அநாவசியமாகப் பேச்சை வளர்த்துவதும் அவனுக்கு இஷ்டமில்லைதான்.

இருப்பினும் அவள் மனத்தைப் புண்படுத்த விரும்பாமல் பதில் சொன்னான். "சீர்படுத்தப் பார்க்கின்றன. ஒழுக்கத்தையும் நீதியையும் நிலை நிறுத்தப்பார்க்கின்றன." என்று.

அவள் கண்களில் வருத்தம் பெரிதும் விரிந்தது. பெரு மூச்சொன்றும் அவள் நாசியிலிருந்து கிளம்பியது. "விளக்கிச் சொல்லுங்கள்" என்று அவள் மீண்டும் கேட்டாள் அந்தத் துன்பப் பெருமூச்சுக் கிடையே.

"கொள்ளைக்காரார்கள் குழுமியுள்ள இடங்கள் எந்த நாட்டிலும் உண்டு அந்த இடங்களை அரசாங்கங்கள் சீர் படுத்துகின்றன. கொள்ளையரை அடக்கவும் மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை அளிக்கவும் பிரயத்தனப் படுகின்றன," என்றான் இளையபல்லவன்.

மஞ்சளழகியின் அடுத்த வார்த்தைகள் மிக நிதானமாக வெளி வந்தன. "இங்கு அதுதான் இல்லை," என்றாள் அவள்.

"என்ன சொல்லுகிறீர்கள்!" என்று ஆச்சரியத்துடன் வினவினான் இளையபல்லவன்.

அவள் நேரடியாகப் பதில் சொல்லவில்லை, "ஸ்ரீவிஜயத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஒரு கேள்வியைத் தொடுத்தாள்.

"உலகத்தின் கிழக்குப் பகுதியிலுள்ள பேரரசுகளில் ஒன்று" என்றான் இளையபல்லவன்.

"அதைத் தவிர?" என்று மறுபடியும் வினவினாள் அவள்.

"பல தீவுகளைக் கொண்டதால் பெரும் நிலப்பரப்பும் உடையது."

"அதையும் தவிர?"

"அத்தனை தீவுகளிலும் தங்கம் கிடைப்பதால் சொர்ண பூமியென்றும் அழைக்கபடுகிறது."

"உண்மை வீரரே! முற்றிலும் உண்மை உலகத்தின் சகல நாடுகளும், ஏன் மனித வர்க்கம் முழுவதுமே தங்கத்துக்காகத்தான் பிராணனை விடுகின்றன. அல்லவா."

"ஆம்"

"அதனால்தான் தூரத்தில், மேல் திசையிலுள்ள யவனரும் அரபு நாட்டவருங்கூட இந்த நாட்டை நாடி வருகிறார்கள்."

"அப்படித்தான் கேள்வி."

"கேள்வி மட்டுமல்ல. உண்மையும் அதுதான் இங்கு தங்கம் நிரம்பக் கிடைக்கிறது. நிரம்ப என்றால் எத்தனை தெரியுமா?"

"சொல்லுங்கள்."

"இங்கு தங்கம் எடுக்கக் கனி எடுத்துப் பதனம் பண்ணிப் பிரிக்க வேண்டாம். இந்த நாட்டு மண்ணிலேயே தங்கம் கலந்திருக்கிறது. மண்ணை நீரில் போட்டால் மண் கரைந்து தங்கம் பிரிந்துவிடும்."

இதைக் கேட்ட இளையபல்லவன் அசந்து போனான். "அப்படியா?" என்று கேட்கவும் செய்தான், ஆச்சரியம் குரலில் தொனிக்க.

அந்த ஆச்சரியத்தை அலட்சியம் செய்யாமலே அவள் சொன்னாள், "வேண்டுமானால் நாளைக்கு நீங்களே சோதித்துப் பாருங்கள். சொர்ணபூமி கூட்டத்தின் முக்கிய நிலமான இந்தச் சொர்ண தீவின் மண் முழுவதும் தங்கமயம். ஆகவே இங்குள்ள யாவருமே தங்கத்துக்காகப் போராட வேண்டிய அவசியமில்லை. தங்கத்தைக் கொடுத்தால் உலகத்தில் கிடைக்காத பொருள் ஏதுமில்லை. இருந்தும் பொன் கொழிக்கும் இந்த நாட்டில்தான் கிழக்குத் திசையிலுள்ள பெரும் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் இந்த அக்ஷய முனையிலும் இதற்குப் பின்னாலுள்ள எரிமலைத் தொடரின் காடுகளிலும், இருக்கிறார்கள். பொன் தேவையே இல்லாத பொன் கொழிக்கும் இந்தப் பேரரசில் கொள்ளைக்காரர் ஏன் வளருகிறார்கள்? யோசித்துப் பாருங்கள்."

அவள் சொற்கள் இளையபல்லவனுக்குத் தீவிர சிந்தனையை அளித்தது. "ஆம். ஏன்?" என்று யோசித்தான்.

'இஷ்டப்பாட்டால் ஸ்ரீவிஜய சாம்ராஜ்யாபதி இந்த அக்ஷய முனையைத் தன் படை பலத்தால் ஒரே நாளில் சீர்படுத்திவிடாலம். ஏன் அப்படிச் செய்யவில்லை?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். விடையேதும் கிடைக்காததால் அவளையே கேட்டான், "ஏன்?" என்று.

"இங்குள்ள கொள்ளைக்காரர்கள் நாட்டுக்குத் தேவையாயிருக்கிறார்கள்," என்று நிதானமாகவும், ஓரளவு வெறுப்புடனும் பதில் சொன்னாள் மஞ்சளழகி.

"கொள்ளைக்காரர்கள் நாட்டுக்குது தேவையா?" ஆச்சரியத்துடன் எழுந்தது. இளைய பல்லவன் கேள்வி.

"இல்லையேல் ஸ்ரீவிஜயத்தின் மன்னர் இந்த அக்ஷய முனையை ஏன் அழிக்கவில்லை?" என்று அவள் பதில் கேள்வி கேட்டாள்.

காரணம் புரியாமல் விழித்தான் இளையபல்லவன் மஞ்சளழனி மேலும் விவரித்தாள். "ஸ்ரீவிஜயத்தின் மன்னர் இந்த அக்ஷயமுனையிலும் அடுத்துள்ள பகுதிகளிலும் உள்ள கொள்கைக் கூட்டங்களை அழிக்காதது மட்டுமல்ல. வளர்க்கவும் வளர்கிறார். அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டு வரும் பொன்னாசையாலல்ல? பொருளாசையாலும் அல்ல" என்ற அவள் சொற்களை இடையே மறித்த இளையபல்லவன், என்ன பொன்னாசையாலல்லவா?" என்றான் வியப்புடன்.

"அல்ல." "வேறெந்த ஆசையால்?"

"மண்ணாசையால்." "மண்ணாசையாலா!"

"ஆம். சொந்த நாட்டின் மீதுள்ள ஆசையால்."

"அதற்குக் கொள்ளையரை வளர்க்க வேண்டுமா?"

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டான் – திரைவிமர்சனம்



கிராமத்தில் வாழும் சமுத்திரக்கனி, தனக்கு பெண் குழந்தை பிறக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால், சிவகார்த்திகேயன் மகனாக பிறக்கிறார். தான் படும் கஷ்டம் தன் மகனுக்கு வர கூடாது என்று நினைத்து, சிவகார்த்திகேயனை படித்து பெரிய ஆளாக்க நினைக்கிறார் சமுத்திரக்கனி. ஆனால், சிவகார்த்திகேயனோ படிக்காமல் பெரிய ஆளாக மாற நினைக்கிறார்.

அதன்பின் இன்ஜினியரிங் காலேஜில் படிக்கிறார் சிவகார்த்திகேயன். அங்கு ஆசிரியராக இருக்கும் எஸ்.ஜே.சூர்யாவிற்கும் சிவகார்த்திகேயனுக்கு பிரச்சனை ஏற்படுகிறது. சிவகார்த்திகேயனை இன்ஜினியரிங் டிகிரி வாங்க விடாமல் தடுக்கிறார்.

இறுதியில் எஸ்.ஜே.சூர்யாவின் தடைகளை தாண்டி, சிவகார்த்திகேயன் இன்ஜினியரிங் முடித்தாரா? வாழ்க்கையில் சாதித்தாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

படத்தில் நாயகனாக நடித்திருக்கும் சிவகார்த்திகேயன் துறுதுறு நடிப்பால் ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார். நடனம், காமெடி, சென்டிமென்ட், காதல் என அனைத்திலும் ஸ்கோர் செய்திருக்கிறார். குறிப்பாக நடனம் மற்றும் பள்ளி பருவ காட்சிகளில் கவனத்தை ஈர்த்து இருக்கிறார். தற்போது படிக்கும் மாணவர்களின் பிரதிபலிப்பாக ஜொலித்து இருக்கிறார் சிவகார்த்திகேயன். இறுதியில் கண்கலங்க வைத்திருக்கிறார்.

நாயகியாக நடித்திருக்கும் பிரியங்கா மோகன் அழகான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். சிவகார்த்திகேயன், பிரியங்கா மோகன் இருவரின் கெமிஸ்ட்ரி சிறப்பாக ஒர்க்கவுட் ஆகியிருக்கிறது. படத்திற்கு பெரிய பலம் எஸ்.ஜே.சூர்யாவின் நடிப்பு. பல இடங்களில் சாதாரணமாக நடித்து கைத்தட்டல் வாங்கி இருக்கிறார். கண்டிப்பான அப்பாவாக மனதில் பதிந்திருக்கிறார் சமுத்திரக்கனி. ராதாரவி, முனிஸ்காந்த், காளி வெங்கட், பாலா, சிவாங்கி, ஆர்ஜே.விஜய் ஆகியோர் திரைக்கதை ஓட்டத்திற்கு பெரிதும் உதவி இருக்கிறார்கள்.

மாணவர்களின் கல்லூரி படிப்பு, அப்பா மகன் பாசம், இளம் இயக்குனர்களின் உணர்வை படமாக இயக்கி இருக்கிறார் இயக்குனர் சிபி சக்கரவர்த்தி. கதாபாத்திரங்களிடையே திறமையாக வேலை வாங்கி இருக்கிறார். முதல் பட இயக்குனர் என்று சொல்ல முடியாத அளவிற்கு படத்தை கொடுத்து இருக்கிறார். குறிப்பாக கிளைமாக்ஸ் உணர்வுபூர்வமாக இயக்கி இருக்கிறார்.

அனிருத் இசையில் பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட். பின்னணி இசை சிறப்பு. பாஸ்கரனின் ஒளிப்பதிவு கண்களுக்கு விருந்து படைத்து இருக்கிறது.

# காரின் சீரியல் எண்ணிற்கு இலட்சக்கணக்கில் செலவழித்துள்ள பிரபலம்!



தெலுங்கு திரையுலகின் முன் னணி நடிகரான ஜூனியர் என்.டி.ஆர் காரின் Number வாங்குவதற்காக பல இலட்சம் ரூபாய் செலவழித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கார் பிரியரான இவர், பி.எம்.டபிள்யூ முதல் ரோல்ஸ் ராய்ஸ் வரை கொள்வனவு செய்து வைத்துள்ளார். அந்த கார்களுக்கு தான் ராசியாக எண்ணும் 9999 என்ற சீரியல் எண்ணையே நம்பராக வாங்கி வைத்துள்ளாராம்,

அந்தவகையில் பி.எம்.டபிள்யூ. காருக்கு தன்னுடைய ராசியான எண்ணான 9999ஐக் வாங்க கிட்டதட்ட 11 இலட்சம் ரூபாய் செலவழித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# "சார்பட்டா பரம்பரை" பட பாணியில் "சியான் 61"

கோப்ரா, பொன்னியின் செல்வன் படங்களை தொடர்ந்து விக்ரம் நடிப்பில் பா.இரஞ்சித் இயக்கவுள்ள படம் குறித்த புதிய தகவல் வெளியாகி உள்ளது.

விக்ரம் நடிப்பில் தற்போது கோப்ரா, பொன்னியின் செல்வன் உள்ளிட்ட படங்கள் தயாராகி உள்ளது. இப்படங்கள் அடுத்தடுத்து வெளியாக இருக்கிறது. இதையடுத்து, பா.இரஞ்சித் இயக்கும் படத்தில் விக்ரம் நடிக்க போவதாக அதிகாரபூர்வமாக படக்குழு அறிவித்திருந்தது.

"சியான் 61" என தற்காலிகமாக பெயரிடப்பட்டுள்ள இப்படத்தை ஸ்டூடியோ க்ரீன் நிறுவனம் சார்பில் கே.இ.ஞான வேல்ராஜா தயாரிக்கிறார். இயக்குனர் பா.இரஞ்சித் "நட்சத்திரம் நகர்கிறது" படத்தில் கவனம் செலுத்தியதால் "சியான் 61" படத்தின் படப்பிடிப்பு சற்று தாமதமானது.

இந்நிலையில் "நட்சத்திரம் நகர்கிறது" படத்தின் பணிகள் இறுதி கட்டத்தை நெருங்கியுள்ளதால் "சியான் 61" படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கும் என கூறப்படுகிறது. மேலும் இப்படத்திற்கு "மைதானம்" என பெயர் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இப்படம் விளையாட்டை மையப்படுத்திய கதை என்றும் இவர் இயக்ஙிய "சார்பட்டா பரம்பரை" படத்தை போன்று முழுக்க விளையாட்டை மையப்படுத்தி உருவாக உள்ளதாக கூறப்படுகிறது. இது ரசிகர்கள் மத்தியில் இன்னும் எதிர்ப்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# அஜித்துடன் இணையும் தேசிய விருது நடிகர்

வலிமை படத்தை தொடர்ந்து வினோத் இயக்கத்தில் நடித்து வரும் அஜித்துடன் பிரபல நடிகர் இணைந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

நேர்கொண்ட பார்வை, வலிமை படங்களுக்கு பிறகு மூன்றாவது முறையாக எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடிக்கும் படத்தை போனி கபூர் தயாரிக்கிறார். ஜிப்ரான் இசையில் இந்த படத்தின் பாடல்கள் உருவாகி வருகிறது. ஏற்கனவே இந்த படத்திற்காக இரண்டு பாடல்களுக்கு ஜிப்ரான் இசையமைத்து இருக்கிறார். இப்படத்தில் நிரவ் ஷா ஒளிப்பதிவாளராக பணியாற்றுகிறார்.

கல்லூரி பேராசிரியராக அஜித் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகின. இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் பூஜையுடன் தொடங்கியது. ஐதராபாத்தில் உள்ள ராமோஜி பிலிம் சிட்டியில் மவுண்ட் ரோடு போன்று செட் ஒன்றும் அமைக்கப்பட்டு படப்பிடிப்பு நடந்து வருகிறது. விறுவிறுப்பாக நடந்து வரும் இப்படத்தின் புதிய தகவல் வெளியாகி உள்ளது. அஜித்தின் "ஏகே 61" படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் சமுத்திரக்கனி நடிப்பதாகக் கூறப்படுகிறது. இதன் அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.



# கமலின் விக்ரம் படத்தில் சூர்யா..

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் கமல் நடித்து வரும் 'விக்ரம்' படத்தில் சூர்யா நடித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மாநகரம் படத்தில் அறிமுகமாகி பின்னர் கைதி படத்தின் மூலம் தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குனர்கள் பட்டியலில் இடம்பிடித்துவிட்டார் லோகேஷ் கனகராஜ். கைதி படத்தின் வெற்றியை தொடர்ந்து விஜயை வைத்து மாஸ்டர் படத்தை இயக்கியிருந்தார். இப்படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது.

இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து கமலின் 232 ஆவது படமான 'விக்ரம்' படத்தை லோகேஷ் கனகராஜ் இயக்கி முடித்துள்ளார். இப்படத்தின் அனைத்து பணிகளும் முடிந்து ஜூன் 3 ஆம் தேதி திரையரங்கில் வெளியாகவுள்ளது. "ராஜ்கமல் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல்" நிறுவனம் தயாரிக்கும் இப்படத்தில் விஜய் சேதுபதி, ஃபகத் ஃபாசில், அஞ்சாதே நரேன், காளிதாஸ் ஜெயராம் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். அனிருத் இசையமைத்துள்ள இப்படத்தின் இசை மற்றும் டிரைலர் வரும் 15 ஆம் திகதி வெளியாகவுள்ளது.

இதற்கிடையில் 'விக்ரம்' படத்தில் நடிகர் சூர்யா சிறப்பு தோற்றத்தில் நடித்துள்ளதாக பேசப்பட்டது. இந்நிலையில் படப்பிடிப்பு தளத்தில் கமல் மற்றும் சூர்யா இருவரும் சந்தித்து கொண்ட வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

இதனை ரசிகர்கள் இதன்மூலம் சூர்யா 'விக்ரம்' படத்தில் நடித்திருப்பது உறுதியாகி உள்ளது என்று பதிவிட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சலி பஞ்சப் பேரிடர் பணி..

அஞ்சலில் பஞ்சப் பேரிடர் பணி..
இடர் பல உற்றோம்
இடம் பல அலைந்தோம்
பிணி பல உற்றோம்
பசிப் பிணி உற்றோம்

உணவில்லைக் கண்ணீர்
மருந்தில்லை கண்ணீர்
மனிதமில்லை கண்ணீர்
வாழ்வில்லை கண்ணீர்

சுகநலமே சமாதான பாலம்
பகிர்ந்துண்டு வாழ்வோம்
வன்மம் களைவோம்
ஆடம்பரம் தவிர்ப்போம்

அரசு இல் அரசியல் இல்
அரசியல் இல் அரசு இல்
நில் நில் நிதானமாவே நில்
வெல் வெல் சாந்தியினை வெல்

இடர் களைவோம் பிணி களைவோம்
துயர் துடைப்போம் உயிர் கொடுப்போம்
அஞ்சலில் பஞ்சப் பேரிடர் என்றே
நெஞ்சினில் மிடுக்குடன் பணி பணி

மருத்துவர்
சி.யமுனாநந்தா

## வாழ்தல் தீது

கல்விக்கு இலக்கணம்
சொல்லோடு பொருட் சேர்க்கும்
நலமான சம தர்மமே
கல்விக்குப் பொருள் சேர்க்கும்
கருத்தோடு மனிதத்தைத் தான் சேர்த்து
கொண்டிடின் மனிதம் வாழும்

மனிதத்தை நிலை நாட்டி
இனியதோர் புவி தோன்ற
கனிவு கொண்டே எழுவீர்
கனவோடு வாழ்ந்து பின்
கதியற்றுப் போவோர் தம்
தாக்கத்தால் கனவும் கெடும்

பள்ளிப் படிப்பினில்
பலநூறு கவி சொல்லும்
கருத்தினைக் கொண்டு தெளிக
தெள்ளு தமிழ் கூறிய நூல்
வள்ளுவத்தை நன்கு கற்றால்
அள்ளக்குறையாத அணிகள் தரும்

புலவர்க்குப் பொருள் கூறும்
பலர் இந்த புவி தன்னில்
இல்லாத காலம் இல்லை
கலகங்கள் தமைக் கண்டு
விலகிடில் துயர் வீழும்
என்றெண்ணி வாழ்தல் தீது

வளவை வளவன்

## தற்கொலைப் பயணம் முடிவு பெறட்டும்

தற்காலிக வாழ்வுக்குள் வந்தோமே வாழத்தானே
தற்கொலையுணர்வு எதற்கு முதலில் யோசி
தற்சமயம் பத்திரிகை
உயிரின் பெறுமதி யாரறிவார் சொல் மனிதா
உன்னதமான உத்தமதாரர்களே
விழிகளைத் திறவுங்கள்
விடியலின் பாதையில் நடை பயில- அதனால்
தற்கொலைப் பயணம் முடிவு பெறட்டும்

சொந்தங்களும் , பந்தங்களும் இம் மண்ணில் தான்
பாசங்களும் பாசங்களை வீசும் மரணத்தில் இணையாது
- புரிந்து கொள்

அழுவதாலும் உருண்டு புரள்வதாலும்
அவலம் தீராது சுக வாழ்வு நிற்காது- மாறிவரும்
நடப்பது நடந்து தானே ஆகணும் அது தானே நியதி
நகைப்பவர் நகைக்கட்டும்
உனக்கென ஒரு காலம் வரும்
உறுதியோடு வாழ்வில் நிலைத்திரு

தற்கொலைப் பயணம் முடிவு பெற
போடு வீர நடை

அக்கராயன் கவியரசன்
கே.ஜே.ரெக்ஸ்

## மௌனத்தின் தேடல்- 559



## ஏணையாய்...

கருவில் சுமப்பாள்
கையில் அணைப்பாள்
மடியின் சூட்டை தினம்
மகிழத் தருவாய்
தோளில் இடுப்பில்
சொகுசாய் சுமப்பாய் நின்
சேலை வாசம் தானே
ஏணையாய் சுமப்பாய்
கல்லாயக் கிடந்த இப்
பூமிப் பந்தைக் கருவுற
வைத்ததும் நின் கருணையோ...

கார்வண்ணன்
காவலூர்

## உயிர் தருபவள்

கருவறைக்குள்ளே
கருணைகாத்து உயிர்
தருபவள் தாய் தாம்
பன்னீர்க் குடப்பாய்மம் சூழ
இருப்பினும் மூச்சுக் காற்றை
உணவை பேச்சேதும் இன்றி
எப்படித்தந்தாய் தாயே நீ
தெய்வக் கடாட்சமாம் இப் புவி
அன்னையர் தினமாய் ஆராதிக்கட்டும்

சாமிபுத்திரன்
சரவணன்

## நீதானே அம்மா

அம்மா அன்னை தாய்மை பெண்மை
பெருமை பொறுமை ஆத்தா நீதானே
இம் மாநிலத்தின் உயிர்களின் மூல
அன்பளிப்பானவள் நீதானே
வாழ்வகம் விட்டு புத்தகம் புகுமின்
வாழ்வியல் தியாகியும் நீதானே
சுவர்க்கம் நினது காலடித் தடமாய்
சுகம் பல தருபவள் நீதானே

வை.க.தவமணிதாசன்
நல்லூர்

## தாயைப் போல யாருமில்லை

மனித வாழ்வில் நாம் எத்தனையோ
உறவுகளைப்பார்த்திருப்போம்
அவர்களோடு அன்பாய்ப் பேசிப்
பழகியிருப்போம் தாயே!
வாழ்வில் எந்த நிலையிலும்
தன் பிள்ளையை என்றும்
மகிழ்வோடு இப்படி
முதுகில் சுமக்கும்
உன்னைப்போல யாருமே
உலகில் இல்லையடா...

சுப்ரமணியம் ஜெகரூபன்
பருத்தித்துறை

## மௌனத்தின் தேடல்- 560



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## ஈன்றவளை

வயிற்றில் உருவாக்கி
கைகளில் அள்ளியெடுத்து
மார்போடரவணைத்து
பாசமாய் பால் தந்து
அன்புடன் சுமந்தவளே!
தோளுக்கு மிஞ்சியவுடன்
சொல்லாலும் செயலாலும்
வதை செய்து உன்னை
அன்னையர் தினத்தில் மட்டும்
வார்த்தையாலங்களால்
பவுசாக் காட்டுகிறோம்.

சி.இ.அன்புதுரை
மானிப்பாய்

## அன்னையே!

உயிர் தந்தாய்
உலவ நடை பயில்ந்தாய்
பேச மொழி சொன்னாய்
வாழ வழி தந்தாய்
என் வாழ்வில் நீ
எல்லாமாகி எல்லையில்லாது
வியாபித்துவிட்டாய் தாயே!


மாவை.உதிஸ்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவின் சில அதிசயங்கள்...

## பஞ்சாப் பொற்கேவில்

சீக்கியர்கள் வணங்கும் பொற்கோவில் பஞ்சாப்பில் அமிர்தசரஸ் நகரில் சீக்கிய மதத்தின் நான்காம் குரு, குரு அர்ஜன் என்பவரால் சிறிய அளவில் கட்டப்பட்டது. 1577 இல் ஐந்தாம் மதக்குரு, குரு ராம் என்பவரால் அடர்ந்த வனப்பகுதியில் புனிதக்குளம் ஒன்று உருவாக்கப்பட்டது. அந்த குளத்துக்கு அம்ரிட்சர் (புனிதக்குளம்) என்று பெயரிடப்பட்டது. 27 வருடங்கள் கழித்து அந்த குளத்தின் எதிரே குரு அர்ஜன் ஒரு ஆலயத்தைக் கட்டினார். அவரது காலத்தில் எளிமையாக கட்டப்பட்டாலும் 1764 இல் அந்தப் பகுதியை ஆண்ட மஹாராஜா ரஞ்சித் சிங் இந்த ஆலயத்தை தங்கத்தால் அழகுபடுத்தினார். இந்த ஆலயத்துக்கு நான்கு புறங்களிலும் வாசல்கள் உண்டு சீக்கிய மதத்தினர் பிற மதத்தினரிடம் திறந்த மனதுடன் இருக்க வேண்டும் என்ற நோக்கில்தான் அவர்களது மத நம்பிக்கைப் படி நாற்புற வாசல்கள் கட்டப்பட்டன.



## வாரணாசி

பனாரஸ் என்றும் வாரணாசி என்றும் அழைக்கப்படும் காசி நகரம், இந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள் என எல்லா மதத்தினருக்கும் புனிதத்தலம் என்பார்கள். காசிக்குச் சென்று கங்கையில் நீராடி, காசி விஸ்வநாதரை தரிசித்தால் முத்தி கிட்டும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்கு காரணமான சிறிய கதை ஒன்றை சொல்வார்கள்.


சூரிய வம்சத்து அரசன் சகரன் அசுவமேத யாகம் செய்து கொண்டிருந்தபோது அவனது குதிரைகளை திடீரென காணவில்லை யாகம் வெற்றி பெற்று விட்டால் சகரன் பலம் பெற்று விடுவான் என்று அஞ்சிய இந்திரன்தான் குதிரைகளைக் கடத்திக் கொண்டு போய் இமயமலையில் கடுந் தவம் புரிந்து கொண்டிருந்த கபிலர் என்கிற முனிவரின் ஆச்சிரமத்திற்குள் கட்டி வைத்துவிட்டான்.

சகரனின் புத்திரர்கள் முனிவரின் ஆச்சிரமத்திற்குச் சென்று குதிரைகளை மீட்கும் போது முனிவரின் தவம் கலைந்து விட்டது. இதனால் கோபம் கொண்ட முனிவர் அவர்களை எரித்து சாம்பலாக்கி விட்டார். ஆச்சிரமத்துக்கு செல்லாததால் தப்பியிருந்த மற்றொரு புத்திரன் முனிவ்ரின் சாபத்திலிருந்து பரிகாரம் தேடி சகோதரர்களை காப்பாற்ற எத்தனையோ முயற்சிகள் செய்தான். ஆனால் அவனால் முடியவில்லை. அவனது மகன் பேரன் என பல தலைமுறைகள் தாண்டியும் சாம்பலானவர்களின் ஆன்மா முக்தியடையாமல் இருந்தனவாம். இறுதியாக அவர்களது வழித்தோன்றல் பகீரதன் என்பவன் இறைவனை நோக்கி கடும் தவம் புரிந்தான். அவனது தவத்தின் பயனாக தேவலோகத்தில் ஓடிக் கொண்டிருந்த தெய்வீக நதியான கங்கையை பூமிக்கு வரவழைத்துத் தான் அதன் புனித நீரை தனது முன்னோர்களின் சாம்பல் மீது தெளித்து முக்தியடைச் செய்தானாம்.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2616

### பிரியன்



அன்பு இல்லாத இடத்தில்
அழகு இருப்பின்
எந்த பயனும் இல்லை...

### கமல்

யாரோ ஒருவரின்
சொல் கேட்டு
நம்மிடம் முகம் சுழிக்கும்
எந்தவொரு உறவும்
நிச்சயம்
நமக்கானவராய்
இருக்க முடியாது!

### கஸ்தூரி




### மிதுலா

ஒருத்தன்
'அயோக்கியன்'
என்று தெரிந்தும்
அவனை
புனிதப்படுத்த
நினைப்பவர்கள்
ஆகச்சிறந்த
அயோக்கியர்கள்

### நரேன்

நிம்மதியாக இருக்க
ஆசைப்பட்ட எதையும் தேடி
அலையாதே...!!
கிடைத்ததை அனுபவிக்க
கற்றுக்கொள்
நிம்மதி உன்னை தேடிவரும்






நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

290

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## யார் பொறுப்பு?

இறப்புக்களை தாங்கிக் கொள்வது, சகித்துக் கொள்வது மிகவும் துயரமானதும் கஷ்டமானதுமான அனுபவம் என்பது எவருக்கும் புரியும். இந்த இறப்புக்களை மறைக்கவோ நியாயப்படுத்தவோ முயல்வது மனிதத்துவத்துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமானது.

இளம் மனைவியையும் பிஞ்சுக் குழந்தைகளையும் தவிக்க விட்டு மாரடைப்பால் மரணித்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்? ஈரல் நோய் காரணமாக இரத்த வாந்தியுடன் அனுமதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? திடீரென ஏற்பட்ட பாரிசவாதத்தால் நம்மை விட்டு மறைந்து போனவர்கள் எத்தனை பேர்?

தொழிலுக்கு போகும் பாதையிலே வாகனத்தால் மோதுண்டு மடிந்து போனவர்கள் எத்தனை பேர்? நஞ்சுண்ட நிலையில் அனுமதிக்கப்பட்டு இறந்து போனவர்கள் எத்தனை பேர்? சமூக விரோத கும்பல்களினால் சட்டத்துக்குப் புறம்பான விதத்திலே கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர்? உடல் பருத்து நீரிழிவு, உயர்குருதி அமுக்கம் ஏற்பட்டு மரணிப்பவர்கள் எத்தனை பேர்? கலாசார சீர் கேடுகள் காரணமாக சிக்கல்களுக்கு ஆட்பட்டு மனவேதனையுடன் மரணிப்பவர்கள் எத்தனை பேர்? சுற்றாடல் மாசடைவதால் தொற்று நோய்கள் மற்றும் புற்றுநோய் என்பன ஏற்பட்டு இறந்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்?

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உறவினர்களின் ஆதரவோ அரவணைப்போ இன்றி அன்புக்கு ஏங்கி மரணித்துப்போகும் முதியவர்கள் எத்தனை பேர்? முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக்கும் இந்த இறப்புக்களுக்கு எல்லாம் யார் பொறுப்பு? மக்களுக்கு போதுமான மருத்துவ சுகாதார அறிவை புகட்டத் தவறிய மருத்துவத் துறையினரின் குற்றமா? ஆரோக்கிய மற்ற உணவுப் பொருட்களையும் பானங்களையும் அருமருந்து போல போலியாக விளம்பரம் செய்ய இடமளித்த ஊடகத் துறையினரின் குற்றமா?

உடற் பயிற்சி ஓர் உயிர் காப்பு பயிற்சி என்பதை சிறுவர்கள் மனதிலே பதிப்பிக்கத் தவறிய பெற்றோர்களின் குற்றமா? நோயுற்று வைத்தியசாலைக்கு வரும் பொழுது அதி உச்சக் கவனிப்பு வசதிகளையும் கவனிப்பையும் உறுதிப்படுத்தாதக சுகாதாரத் துறையினரின் குற்றமா? உயிர் கொல்லிகளான சிகரெட், சுருட்டு, பீடி போன்றவற்றை கடைகளிலே விற்பனை செய்வதற்கு அனுமதித்தவர்களின் குற்றமா?போதைப் பொருள் பாவனையைக் கட்டுப் படுத்த முடியாது போன காவல் துறையினரின் குற்றமா?

தீய பழக்கங்களையும் சமுதாய சீரழிப்பு நடவடிக்கைகளையும் எம்மிடையே பரப்ப அனுமதித்துக் கொண்டிருக்கும் எமது சமுதாயக் கட்டமைப்பின் குற்றமா? ஒருவரை பசியாத பொழுதும் உண்ணுமாறு வற்புறுத்துவதை ஓர் உபசரிப்பு முறையாகக் கருதும் எமது கலாசாரத்தின் குற்றமா?

எமது மக்களிடையே அன்பு, அமைதி, ஆதரவு, மன்னிக்கும் மனோபாவம், துயர் துடைப்பு, தியானம் போன்ற நல்ல விடயங்களை வேரூன்ற வைக்கத் தவறிய எமது மதங்களின் குற்றமா?

பொன் கொழிக்கும் விளை நிலத்திலே உயிர் கொல்லிகளான புகையிலையை பயிரிட்டும் நஞ்சு தெளிக்கப்பட்ட மரக்கறி, பழ வகைகளை சந்தையிலே விற்பனை செய்தும் வருகின்ற விவசாயிகளின் குற்றமா? சந்து பொந்துகள் எங்கும் சாராயக் கடைகள் திறக்க அனுமதித்தவர்களின் குற்றமா?

சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தத் தவறிய கற்றறிந்தவர்களின் குற்றமா? சமுதாய சீர்கேடுகளுக்கு வழிகோலும் ரீ.வி தொடர் நிகழ்ச்சிகளுக்கு அடிமையாகி இளம் சமுதாயத்தினரையும் அதற்குப் பலி கொடுத்துக் கொண்டிருக்கும் குடும்பத்தவர்களின் குற்றமா? தெருவிலே வாகனம் செலுத்துவதற்கு தகுதி அற்றவர்களையும் தகுதி அற்றவாகனங்களையும் தொடர்ந்து அனுமதித்துக் கொண்டிருக்கும் வீதி ஒழுங்குக்குப் பொறுப்பானவர்களின் குற்றமா?

தவிர்க்கப்படக் கூடிய மரணங்களை தவிர்ப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் எம்மை மாற்றிக் கொள்வதற்கு நிறைய இடம் இருக்கிறது என்பது புலப்படுகிறது. நாம் மற்றவர்களை திருத்த முயல்வது போலவே எம்மையும் சற்று மாற்றிக் கொள்ள முயல்வோம். அதன் மூலம் பல அறியாய மரணங்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தவிர்க்க முடியும்.

நாம் விடும் தவறுகளையே நாமே அடையாளப் படுத்தி எம்மை நாமே திருத்திக் கொள்ள முயலும் பயிற்சியானது உண்மையிலேயே மிகவும் கடினமானது.

ஆனால் இது தான் மனிதனை மனிதத்துவம் மிக்கவனாக மாற்றும் ஒரு முக்கியமான இயல்பாக அமையும். தான் விடும் தவறுகளை தானே புரிந்து கொள்ளத் தெரியாத தன்மையே சுகாதார மேம்பாட்டுக்கும் மனித குல மேம்பாட்டுக்கும் பெரும் தடைக்கல்லாக இருக்கிறது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

Thamilhealth.com

"பாடலும் தேடலும்"
2022
வளர்ந்து வரும் ஈழத்துக் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாக
நித்திலம் கலையகத்தால் நடாத்தப்படும் இன்னிசைப் போட்டி
உங்களுடைய சொந்த பாடலுக்கு இசை அமைத்து பாடி அதற்கு ஏற்ற ஒளி அமைப்பையும் உள்ளடக்கி வீடியோ வடிவில் உங்கள் ஆக்கம் தயாரிக்கப்பட வேண்டும்.
போட்டி விதிமுறைகள்
ஈழத்தை பூர்வீகமாகக்கொண்ட அனைவரும் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.
03 தொடக்ம் 05 நிமிடங்களுக்குட்பட்டதாக உங்கள் ஆக்கம் அமையவேண்டும்.
ஒளிப்பதிவுகள் உங்கள் சொந்த பதிவுகளாக இருப்பதுடன் ஆக்கங்கள் தொலைக்காட்சிகளிலோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ வெளிவராதவைகளாக இருத்தல் வேண்டும்.
போட்டியில் தனி நபராகவோ, குழுவாகவோ பங்குபற்ற முடியும்.
தனி நபர் அல்லது ஒரு குழு ஒன்றுக்கு மேற்பட்ட ஆக்கங்களை வழங்க முடியாது.
சாதாரண தொலைபேசி ஒளிவாங்கியூடாகவும் ஆக்கங்கள் தயாரிக்கமுடியும். ஒலி,ஒளி பதிவுக்கான தராதரத்துக்கான புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.
5பேர் கொண்ட நடுவர்களும், மக்களின் விருப்பு வாக்குகளுமே வெற்றியாளர்களை தீர்மானிக்கும்.

முதலாவது பரிசு 50,000/=
இரண்டாவது பரிசு 35,000/=
மூன்றாவது பரிசு 10,000/=
மேலும் பல ஆறுதல் பரிசில்களும்,சான்றிதழ்களும் வழங்கப்படும்.

புள்ளிகள் வழங்கப்படும் போது கவனிக்கப்படும் விடயங்கள்
பாடல் வரிகள்
இசை - எமது பாரம்பரிய இசைக்கருவிகளின் இசைகளை உபயோகித்தல்,
குரல் - இசை மெட்டு எமது கலாச்சாரம் மருவி இருத்தல்,
பாடலுக்கேற்ற ஒளிப்பதிவு - பாடல் வரிகள் எமது வாழ்வியலுடன் ஒன்றிருத்தல்,
படத்தொகுப்பு

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் உங்கள் ... Thamilhealth@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 25.05.2022 ... மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தொடர்புகளுக்கு: 021 222 21 95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org